
சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 4 | இதழ்: 01 | ஜூன்- 2022 | விலை - ரூ.15/-


VOL:4 | ISSUE: 01 | JUNE - 2022 | Rs. 15/-





மரணத்தை வென்ற மகாவீரர்..!

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு-4 மலர்-01 ஜூன் - 2022

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு
திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்
திருமதி. S.சாந்தி, சென்னை.
திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.
திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.
திரு. B.முருகன், சோழவந்தான்.
செல்வி. S.சௌம்யா, சென்னை.

இதழ் வடிவமைப்பு
சிகரம் பப்ளிகேஷன்ஸ்

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்

எண்:17/7A. பழனியப்பா முதல் தெரு, 1-வது மாடி, அயனாவரம், சென்னை 600 023.
செல்: 99418 16692,88258 31068.

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.



அமுத மொழி.
அன்பு குழந்தையே.....

எனது திருநாமத்தை ஆத்மார்த்தமாக ஒரு முறை கூறுபவன், அவனது கஷ்டங்களுக்காக, வேறு எந்த விதமான பரிகார பூஜைகளோ, புனித தீர்த்தங்களோ, ஆட வேண்டிய அவசியமில்லை.

ஆத்மார்த்தமாக கூறப்படும் நாம ஜெபம் எல்லாத் தடைகளையும் நீக்குகிறது. நாம செபத்தின் சக்தியை உணராதவர்களே பணத்தையும், நேரத்தையும், பரிகாரத்திற்காகச் செலவிடுகிறார்கள். பரிகாரத்திற்கும் பக்திக்கும் உள்ள வேறுபாட்டைத் தெரிந்துகொள். எந்த இடத்தில் இருக்கிறாயோ அந்த இடத்தில் இருந்தபடியே எனது நாமத்தை ஆத்மார்த்தமாக உச்சரித்து வா. உனக்குள் மாற்றம் உண்டாகும்.

உண்மையாகவே எல்லா பாவத்திலிருந்தும் விடுதலையாகவும், நன்மைகளை அடையவும், மனத்தை தூய்மை செய்துகொள்ளவும், சடங்குகள் போன்ற பிற சாதனை முறைகளின்றி என் அருளைப் பெறவும், நாம ஜெபமே எளிய வழி என்பதை நீ உணர்ந்து கொள்.

இந்த கணத்தில் இருந்து அன்போடு என் திருநாமத்தை உச்சரிக்கத் துவங்கு. மாற்றம் நிச்சயம் வரும். நான் உனக்காக இறங்கி வேலை செய்கிறேன்.

- பகவான் ஸ்ரீ சாயிபாபா

ஆசிரியர் பக்கம்...



அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

சற்குரு சாயிநாதரின் அருளால் நாற்பத்து ஏழாவது இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா 08.05.2021 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு நமது ஸ்ரீ சாய்ராம் ஆத்ம ஞானசபையில் (17/7A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி, அயனாவரம், சென்னை-23) நடைபெற்றது.

வழக்கம்போல் காலை ஆறு மணிக்கு ஆசிரியரின் சத்சங்கத்துடன் விழா ஆரம்பித்தது. எட்டு மணிக்கு தியானமும், கூட்டுப்பிரார்த்தனையும், அதைத் தொடந்து, அமிர்தா அட்சயா ஆகியோரின் பஜனை நிகழ்வும் நிகழ்ந்தன.

பத்து மணிக்கு "பாராயணப் பகலவன்" திரு.சாய் சுந்தர் அவர்கள் சொற்பொழி வாற்ற, அதைத்தொடர்ந்து ஆசிரியர் அவர்கள் இம்மாத இதழ் உருவான விதம் பற்றி பக்தர்களிடையே பகிர்ந்து கொண்டார்கள். அதைத் தொடந்து புத்தக வெளியீட்டு விழா நடந்தேறியது. இம்மாத இதழை சாயி சேவகி திருமதி. ரேவதி அவர்கள் வெளியிட, பாபாவின் பக்தை, திருமதி. திருமகள் அவர்கள் பெற்றுக்கொண்டு சிறப் பித்தார்கள்.

இம்மாதம் நமது இதழுக்கு தஞ்சை மாவட்டம், கரந்தையைச் சேர்ந்த அன்புச்சகோதரர் திரு. முல்லை வேந்தன் அவர்கள் நமது இதழுக்கு ஏழு ஒரு வருட சந்தாதாரர்களையும், கோவை திரு. மதியழகன் அவர்கள் நான்கு சந்தாதாரர்களையும் இணைத்து சாயி சேவை செய்திருக் கின்றார்கள். அவர்களும் அவர்களது குடும்பத்தினர் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று பகவான் சாயிநாதரின் ஆசியோடு வாழ்க வளமுடன் என்று வாழ்த்துகிறோம்.

பகவான் சாயிநாதரின் புகழ் பரப்பும் இந்த இதழ் உங்களுக்கு பிடித் திருந்தால் இதில் வரும் கருத்துக்கள் அனைவருக்கும் சென்று சேர வேண்டும் என்று நினைத்தால் நீங்களும் நமது இதழுக்கு சந்தாதாரர்களை



திரு.சாய் சம்பத் உடன் ஆசிரியர்



இணைத்து இதழ் தொடர்ந்து வெளிவர சாயி சேவையில் இணையும்படி கேட்டுக் கொள்கிறோம்.

வில்லிவாக்கத்தை சேர்ந்த சாயி சேவகரும், பண்பாளருமான திரு. சாய் சம்பத் அவர்கள், கனடாவில் இருந்து சிவக்குமார் என்ற சாயி பக்தர் அன்ன தானத்திற்கென அனுப்பிய தொகை ரூ.10000 த்தை நமது அன்னதானத் திட்டத்திற்கு நேரில் வந்து வழங்கி நமது அன்னதான சேவையை வாழ்த்தி மகிழ்ந்தார். திரு.சாய் சம்பத் அவர் களுக்கும், திரு சிவக்குமார் அவர்களுக் கும் எங்களது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

சுவாமிமலை சீரடி சாய் சமுதாய நலக்கூடத்தின் நிர்வாகியும் நமது நெருங்கிய நண்பருமான திரு. வீராச் சாமி அவர்கள் சென்ற 9.5.22 அன்று பகவான் சாயிநாதரின் பாத கமலங்களில் ஓய்வெடுக்கச் சென்று விட்டார். அவரு டைய நண்பர் களுக்கும், குடும்பத் தாருக்கும், நமது இதழின் சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதழ் வெளியீட்டை ஒட்டி ஏழை எளியவர்களுக்கு அவர்கள் இருக்கும் இடம் தேடிச் சென்று அன்னதானம் வழங்கப்பட்டது.

பகவான் சாயிநாதரின் அருளால் மிக விரைவில் உலகெங்கும் பரவி யிருக்கும் பெருந்தொற்று கட்டுக்குள் வந்து உலக மாந்தர்கள் அனைவரும் நிம்மதியுடனும், ஆரோக்கியத் துடனும், வாழ வேண் டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம்.

மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்!

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

- அன்புடன் ஆசிரியர்.









சாய் தியானாலயாவில் "சாயி லீலா"

– ஜெயந்தி ஸ்ரீராம்

லீலை: 6. சாய் தியானாலயாவிற்கு பாபா வருகை...

சீரடி சாயிபாபா தியான பீடத்திற்குச் சென்றால் உன் கேள்விக்குப் பதில் கிடைக்கும் என்று பெரியவர் கூறிச்சென்றதும், குரு உடனே பாபா கோவிலுக்கு செல்ல முடிவெடுத்து நடக்க ஆரம்பித்திருக்கின்றார்.

அதிகாலை வேளை, இருபுறமும் காவிரி ஆற்றில் இருந்து பிரிந்தோடும் கால்வாய்களில் தண்ணீர் தழும்பியோட, அதில் துள்ளிக் குதிக்கும் மீன்களும், அதை பிடித்து இறையாக்கிக் கொள்ள விரையும் வாத்துக் கூட்டங்களும், வாத்தை விரட்டி ஓடும் கிராமத்து சிறுவர்களும் என இயற்கையை ரசித்துக்கொண்டே நடந்து மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் பாபாவின் ஆலயத்தை அடைந்திருக்கின்றார்.

தூரத்தில் இருந்தே சுற்றுவட்டாரத்தில் ஒருவரும் கண்ணில் தென்படவில்லை. குரு மெல்ல ஆலயத்தை அடைந்திருக்கிறார். ஆலயம் திறந்திருக்க, ஆலயத்திற்கு உள்ளேயும் யாரையும் காணவில்லை. உள்ளே நுழைந்து பாபாவின் சிலையின்முன் நின்று அவரையே ரசித்துப் பார்க்கின்றார்.

சிலை பளிங்குச்சிலை அல்ல, சிமிண்ட் மணல் கலந்து செய்யப்பட்டது. கிராமத்து சிற்பியின்



கைவண்ணத்தில் கருணையே வடிவாக உருவாகி அருள் பாலித்துக் கொண்டிருப்பதை சற்று நேரம், வியந்து ரசித்துப் பார்த்துவிட்டு, ஓர் ஓரமாக அமர்ந்து தியானத்தில் ஆழ்கிறார்.

ஐந்து நிமிடம் சென்றிருக்கும், யாரோ குருவை அழைக்க, குருவின் தவம் கலைந்து கண் திறந்து பார்க்க, அங்கே மொட்டை தலையுடன் ஒருவர் நின்றிருக்கின்றார். தவம் பாதியில் கலைந்து விட்டதற்காக குரு அவரை சற்று கோபத்துடன் பார்க்க, அவரோ கோபித்துக் கொள்ளாதீர்கள் சுவாமி. இன்னும் ஆலயத்தை சுத்தம் செய்யவில்லை. சுவாமிக்கு அபிசேகம் ஆராதனையும் செய்யவில்லை. அதனால்தான். என்று இழுக்க..

குரு உடனே எழுந்து கொண்டு வெளியேற முயற்சிக்கையில், அவரே, சுவாமி நீங்கள் சென்னையில் இருந்து வருகின்றீரா என்று கேட்க, குருவும் ஆமாம் என்று கூற, அப்படியானால் எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டுமே என்றிருக்கின்றார்.

என்ன உதவி என்று குரு கேட்கவும், அவரே கூற ஆரம்பித்திருக்கின்றார். என் பெயர் ரவி. நான் தென்காசியை சேர்ந்தவன் நான் இந்த கோவிலில் அர்ச்சகராக பணிசெய்கிறேன். இந்த பாபா ஆலயம் சமீபத்தில்தான் கட்டப் பட்டது. இன்று அதன் 108 வது நாள். தொடர்ந்து 108 நாட்கள் அபிசேக ஆராதனை செய்கின்றோம் என்று சங்கல்பம் செய்து கொண்டு அதன்படி செய்து வருகின்றோம். நேற்றுவரை 107 நாட்கள் எல்லாம் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

இன்று ஒரு நாள் அபிசேகம் நடந்து விட்டால் 108 நாட்கள் பூர்த்தியாகி விடும். ஆனால் யார் கண்பட்டதோ இன்று என்னால் பாபாவிற்கு அபிசேக ஆராதனை செய்ய முடியாத நிலையில் உள்ளேன்.என்றிருக்கிறார் சற்றே கண்கலங்கியபடி.

உடனே குரு அவர்கள், சரி அதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று கூறுங்கள் என்று கேட்க, அவரோ, இன்று ஒரு நாள் மட்டும் பாபாவிற்கு அபிசேக ஆராதனை செய்து ஆரத்தி காட்டிவிடுங்கள் என்று கூற.

குரு அதிர்ச்சியாகி நின்றிருக் கின்றார். ஏன் என்றால் முதல் நாள் தான், என்னிடம் இனிமேல் "நான் ஆரத்தி காட்டமாடடேன்" என்று கூறிச்சென்றார். அதேபோல் அன்று காலையில் தேனீர் கடையில் " நான் தேனீர் குடிக்கமாட்டேன்" என்றும் கூற அதற்கு அந்த பெரியவர், தேனீர் குடிக்க மாட்டேன் என்பது உங்களின் தகுதியா என்று கேட்டிருக்கின்றார்.

இந்த சம்பவங்களை இணைத்துப் பாரத்த குரு அவர்கள், இரண்டுமே நான் என்ற அகங்காரத்தின் வெளிப் பாடுதான் என்பதை உணர்ந்து கொண்டு, நடப்பது பாபாவின் லீலை என்பதையும் அறிந்து கொண்டு, அய்யா, நான் இதுவரை அபிசேக ஆரத்தி செய்ததில்லை. மேவும் எனக்கு மந்திரங்கள் ஏதும் சொல்லத்தெரியாது. என்று பணிவாக கூற,

அதற்கு அர்ச்சகரோ, நீங்கள் மந்திரம் சொல்லத் தேவையில்லை. நான் சொல்வதை மட்டும் செய்தால் போதும். என்று கூறியவுடன், குரு சற்றே யோசித்திருக்கின்றார். உடனே அர்ச்சகர்,தயவு செய்து மாட்டேன் என்று மட்டும் கூறிவிடாதீர்கள் என்று கெஞ்ச ஆரம்பிக்க, குருவோ சரி நான் செய்கின்றேன். ஆனால் 107 நாட்கள் சரியாக பூஜை செய்த நீங்கள், இன்று கடைசி நாள் செய்ய முடியாத காரணம் என்ன என்று கேட்க,

அர்ச்சகரோ, அதை மட்டும் என்னிடம் கேட்காதீர்கள், நான் மன தளவில் சற்று சலனப்பட்டு ஒரு பாவ காரியம் செய்துவிட்டேன் என்று கண்கலங்கிய அவர், வேறு யாரிடமும் இதை கூறிவிடாதீர்கள்.எனக்கு வேலை போய்விடும். என்று அழுதிருக்கின்றார்.

உடனே குரு அவர்கள் அவரை நோக்கி அழாதீர்கள்! நாம் அனைவரும் மனிதர்கள்தானே! நீங்கள் செய்தது பாவம் என்றால், நானும் ஒரு வகை யில் பாபம் செய்தவன் தான். அதற்குத் தான் பகவான் சாயிபாபா இப்படி ஒரு

பிராயச்சித்தத்தை எனக்கு வழங்கி யிருக்கின்றார். அதுவும் உங்கள் மூலமாக. நானே மனப்பூர்வமாக அபி சேக ஆரத்திகளை செய்கிறேன் என்று கூறி, பகவான் சாயிநாதருக்கு அர்ச்சகர் கூறக்கூற அனைத்து முறைகளையும் செய்து ஆரத்தி காட்டியிக்கின்றார்.

ஆரத்தி காட்டியபின்பு, நான் இப்போது தியானம் செய்யலாமா என்று கேட்க, தாராளமாக செய்யுங்கள் என்று விரிப்பு ஒன்றை எடுத்துபோட்டு உதவி யிருக்கின்றார் அர்ச்சகர். கிட்டதட்ட இரண்டு மணிநேரத்திற்கு பின் கண்விழித்த குருவிடம் அர்ச்சகர் தேனீர் குவளையை நீட்ட, இப்போது ஏதும் கூறாமல் தேனீர் கோப்பையை கையில் வாங்கிய குருவிற்கு ஆச்சர்யம்.

ஏன் என்றால் அதில் அவர் எப்போதும் விரும்பிக் குடிக்கும் வறகாப்பி என்ற பால் கலக்காத காபி இருந்திருக்கின்றது. நான் வறகாப்பி தான் குடிப்பேன் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும் இன்று குரு கேட்க, அதற்கு அர்ச்சகர் அன்று அதிகாலையில் நடந்த கதையை கூறியிருக்கின்றார்.

தான் செய்த தவறுக்கு வருந்தி இன்று நான் பாபாவிற்கு அபிசேக ஆரத்தி எப்படி செய்வேன் என்று வருந்தியபடி தனக்குத்தானே மொட்டையடித்து க்கொண்டு, கால்வாயில் குளித்து எழுந்து கரையில் அமர்ந்து அழுது புலம்பிக் கொண்டு இருந்திருக்கின்றார். அந்த அதிகாலை வேளையில் ஒரு வயதானப் பெரியவர் வந்து, ஏண்டா அழறே முண்டமே! என்று அதட்டி கேட்க, அவரைப் பார்த்ததும் அவரிடம் நடந்த அனைத்தையும் கூறிவிட வேண்டும் என்ற உந்துதல் ஏற்பட, விபரம் கூறி அழுதிருக்கின்றார்.

அதற்கு அந்த பெரியவர், சரி, சரி கண்ணை தொடச்சிக்கிட்டு கோவிலுக்குப் போ! சென்னையில் இருந்து ஒருத்தன் வருவான். அவன் ஆரத்தி காட்டுவான். போடா போ இனிமே தப்பு செய்யாதே என அவரை ஓங்கி முதுகில் அடித்து அனுப்பியதாகவும், அவனுக்கு பால் பிடிக்காது. வறகாப்பி வச்சு கொடு, என்று அவர்தான் கூறியதாகவும் கூற குருவிற்கு நேற்று இரவில் இருந்து நடப்பதெல்லாம் கலியுகத்தின் கண்கண்ட தெய்வம் பகவான் சாயிநாதரின் லீலையே எனப் புரிந்து ஆனந்த கண்ணீர் சிந்தியிருக்கின்றார்.

அன்றிலிருந்து சாய் தியானாலயாவில் குருவே ஆரத்தி காட்டி வருகின்றார் என்பது நாங்கள் கண் முன்னால் கண்ட சாயிலீலை.

லீலை: 9. சீரடிக்கு இலவச யாத்திரை.

சாய் தியானாலயாவிற்கு பாபாவின் லீலைகளால் ஈர்க்கப்பட்டு பக்தர்கள் அதிகளவில் வர ஆரம்பித்த நேரம் அது. பக்த்ர்களில் பலர் சீரடிக்கு செல்ல வேண்டும் என்று விருப்பப்பட, குருவும் சீரடிக்கு சென்று வர ஆகும் செலவுகளைப் பற்றி விபரம் சேகரித்து

நபர் ஒருவருக்கு ரூ.2500 ஆகும் என்று அறிவிக்க ஒரு சிலர் அவ்வளவு பணம் புரட்டமுடியாது என்று பின் வாங்கினர்.

குருவிற்கோ, சென்றால் சபையில் இருக்கும் அனைவரும் செல்ல வேண்டும். ஒரு சிலரை விட்டு விட்டு செல்லமுடியாது. ஆகவே



தகுந்த நேரம் வரும் போது நம் அனைவரையும் சாயியே இலவசமாக அழைத்துச் செல்வார். அதுவரை நாம் பொறுமையாக இருப்போம் என்று சீரடிப்பயணத்தை ரத்து செய்தார்.

ஆறு மாதம் கழிந்திருக்கும். நகரின் தொழிலதிபர் ஒருவர் நமது குருவிடம் யோகா கற்றுக் கொள்ள வந்தார். வரும் பொழுது குரு வெறும் யோகா மாஸ்டர் என்று மட்டுமே நினைத்து வந்துவிட்டார். அவர் மட்டும் அல்ல நிறைய பேர் அப்படித்தான் வருவார்கள். அவரிடம் நெருங்கிப் பழகிய பின்புதான் குருவைப் பற்றி புரிந்து கொள்வார்கள்.

இவரும் அப்படித்தான். போகப் போக குருவைப் பற்றி அறிந்து கொண்டவுடன் அவர்களது குடும்பத்தில் நீண்டகாலமாக தடங்கலாகிக் கொண்டிருந்த சொத்து சம்பந்தமான பிரச்சனையை கூறி பிரார்த்திக்க வேண்டுகிறார். குரு பிரார்த்தனை செய்ய, நீண்டகால பிரட்சனை மிக விரைவிலேயே தீர்ந்து அவருக்கு நல்ல லாபம் கிடைக்கிறது.

மனம் மகிழ்ந்த அவர், நமது குருவிடம் அவரின் வறுமை நிலையினை அறிந்து அவருக்கு தனிப்பட்ட முறையில் காணிக்கையாக ரூ.50000 அளிக்க, குருவோ, எனக்கு தனிப்பட்ட முறையில் பணம் வேண்டாம் என்று மறுத்திருக்கின்றார்.

தொழிலதிபர் தன்னுடைய திருப்திக்காக பெற்றுக்கொள்ள வேண்டும் என்று மிகவும் வற்புறுத்த, குருவோ, வேண்டுமானால் அந்த தொகையை சபையில் இருக்கும் அனைவரையும் சீரடிக்கு அழைத்துச் செல்ல பயன் படுத்திக்கொள்ளட்டுமா என்று கேட்க, அவரும் நமது குரு வின் பெருந் தன்மையை உணர்ந்து தாராளமாக பயன்படுத்திக் கொள் ளுங்கள். நானே அனைத்து செலவு களையும் ஏற்றுக் கொள்கின்றேன் என்று கூறி விட்டார்.

அடுத்த வியாழன் அன்று இந்த நற்செய்தியை சபை உறுப்பினர்களிடம் அறிவித்துவிட்டு பாபாவின் லீலையை பக்தர்களிடம் கூறி ஆனந்தப்பட்டார் நமது குரு ஸ்ரீராம் அவர்கள்.

அடுத்த ஒரு மாதத்தில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு 40 நபர் களுடன் குருவின் தலைமையில் சாய் தியானாலயாவின் முதல் பயணமாக சீரடிக்குச் சென்று ஆனந்தமாக பகவான் பாபாவை தரிசித்து வந்தோம்.

லீலை: 10. அன்னதானம் ஆரம்பித்தது.

சாய் தியானாலயாவிற்கு வரும் உறுப்பினர்கள் பலர் குருவிடம் நீங்கள் ஏன் அன்னதானம் ஆரம்பிக்ககூடாது என்று கேட்க ஆரம்பித்தனர்.

அதற்கு குரு அவர்கள், எதையும் எளிதாக ஆரம்பித்துவிடலாம். ஆனால் அதை தொடர்ந்து செய்வது கடினம். தற்போதைய நிலையில் என்னால் தொடர்ந்து செய்வதென்பது இயலாது. தவிர அன்னதானம் என்பது இல்லாதவருக்கும், இயலாதவருக்கும் அளிக்கப்படவேண்டும்.அதுவே அன்னதானம்.இருப்பவர்களுக்கு அளித்தால் அது அன்னதானம் அல்ல "விருந்து" என்பார்.

ஆன்மீகத்தைப் பொறுத்தவரை எந்த ஒரு செயலையும், நாமாக ஆரம்பிக்கக் கூடாது, அப்படி ஆரம்பித்தால் "நான்" ஆரம்பித்தேன் என்ற அகங்காரம் வந்து விடும். பாபாவின் அருளால் அதுவாக வந்து அமைய வேண்டும். அப்போதுதான் அது பாபாவால் அமைத்துத்தரப்பட்டது. நான் அதில் வேலைக்காரன் மட்டுமே! என்ற பணிவு உண்டாகும் என்று அடிக்கடி கூறுவார்.

குரு அவர்கள் வியாபாரம் செய்து கொண்டிருந்தபோது, காலை உணவு உணவகத்தில் தான் அருந்துவார். அப்படி அவர் என்ன உணவு அருந்துகிறாரோ, அதே உணவை அன்னதானம் செய்யலாம் என்று பத்து பார்சல் வாங்கிக்கொள்வார்.

ஆனால் அலுவலகத்தில் இருந்து வீட்டிற்கு வரும் வழியில் அதை கொடுப்பதற்கு கூச்சப்பட்டுக் கொண்டே வீட்டிற்கு எடுத்து வந்துவிடுவார். கேட்டால், கர்மா தீர்ந்தால்தான் அன்னதானம் செய்யமுடியும். எனது கர்மா தீரவில்லையோ என்னவோ என்பார்.

குருவினுடைய வாக்குப்படி, கர்மா எப்பொழுது தீர்ந்தது. எப்படி அன்னதானம் ஆரம்பிக்கப்பட்டது என்பதைப் பற்றி அடுத்த மாதம் எழுதுகிறேன்.

– லீலைகள் தொடரும்...



பெற்றோரின் கடமை

பெற்றோரின் முதல் கடமை தன் குழந்தையை பேணுதல். பிற விசயங்கள் எல்லாம் அதற்குப் பின்தான். உங்கள் கைகளில் அழகிய ஆத்மா ஒன்றை இறைவன் ஒப்படைத்திருக்கின்றார். அதற்காக நீங்கள் எதையும் தியாகம் செய்பவராக இருக்க வேண்டும்

பிற கடமைகளை செய்வதற்காக குழந்தைகளை புறக்கணிக்காதீர்கள். உலகத்திற்கு நீங்கள் தேவைப்படாமல் இருக்கலாம். ஆனால் உங்கள் குழந்தைக்கு நீங்கள் தேவை. நீங்கள் உங்கள் பொறுப்பை உணர்ந்து, ஆண்டவன் எனக்கு இக்கடமையை கொடுத்துள்ளான். நான் இக்கடமையை நன்றாகச் செய்வேன். என்று உணர்ந்தால் உங்களுக்கு இறைவனிடமிருந்து வலிமை கிடைக்கும்.

ஆண்டவன் குழந்தையை உங்கள் பொறுப்பில் விட்டுள்ளான். நீங்கள் அப்பொறுப்பை நிறைவேற்ற போதிய சக்தியை கொடுப்பான் குழந்தையை நலிந்த கைகளில் கொடுப்பதற்கு அவன் முட்டாள் அல்ல. ஆகையால் உங்கள் வலிமையை உணருங்கள். அதில் நம்பிக்கை கொள்க! இந்த அழகிய தெய்வக்குழந்தையை பேணுக! அதை ஆண்டவனின் ஆன்மீகக் குழந்தையாக வளர்ப்பீராக!

விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

அன்பான சாயி சொந்தங்களே...உங்களது நிறுவனங்கள், கடைகள், தொடர்பான விளம்பரங்களை பிரசுரித்து பயனடையலாம்.



முழுபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.2000

அரைபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.1000

முன் பின் அட்டை உள்பக்கம் கலர் ரூ.3000

பின் அட்டை கலர் ரூ.4000

தொடர் –47

குருவைத் தேடி

நாங்கள் ஆஸ்ரமத்தை நோக்கிச் சென்றோம் அந்த நாள் எங்களுக்கு இனிய நாளாய் இருக்கப்போகின்றது என்பதோ, எங்களுக்கு ஆஸ்ரமத்தில் ஓர் ஆச்சர்யம் காத்திருக்கின்றது என்பதோ அப்போது எங்களுக்கு தெரியாது.

ஆஸ்ரமத்திற்குள் சென்றுநேரே எனது தீட்சா குருவாகிய திரு.இராமா சாது அவர்களின் சமாதியின் முன்பு அமைதியாக அமர்ந்து நானும், என் மனைவியும் சற்று நேரம் தியானம் செய்து கண் விழித்தோம்.

எங்களுக்கு முன்னே முதுகைக் காட்டிக்கொண்டு வெள்ளுடை அணிந்த ஒருவர் யோகி இராமா சாதுவை வணங்கிவிட்டு மெல்ல எங்களை நோக்கி திரும்புகிறார். அவரை அவரது உதவியாளர் கைத்தாங்கலாக பிடித்திருக்கிறார்.

கண்விழித்த நாங்கள் அவரைப பார்க்கின்றோம். அடுத்த விநாடி எங்கள் இருவரது உடலும் நடுங்க ஒருவரை ஒருவர் பார்த்தபடி அதிசயத்துப் போகின்றோம். கடந்த சில நாட்களாக யாரைப் பார்க்க முடியவில்லை என்று வருத்தப் பட்டோமோ, எவர் இந்த உலகத்தை விட்டுச் சென்றுவிட்டார் என்று கலங்கி நின்றோமோ, அந்த அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் எங்கள் முன் ரத்தமும் சதையுமாக, தன் இரு கைகளையும் தூக்கி ஆசீர்வதித்து வாழ்க வளமுடன்



என மும்முறை எங்களை வாழ்த்த, நானும் என் மனைவியும் குருவே .... என்று நெடுஞ்சான்கிடையாக அவரின் பாதத்தில் விழுந்து வணங்கி எழுந்தோம்.

எங்களின் முன்பு அருட் தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் உயிரோடு எங்களுக்கு காட்சி அளித்துக் கொண்டிருக்கின்றார் என்பதை எங்களால் நம்பவே முடியவில்லை. அவரையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டே இருக்கின்றோம்.

எங்களது இருவரது கண்களிலும் கண்ணீர் வழிந்தோடுகிறது. அருட் தந்தை மீண்டும் எங்களின் தலையில் கை வைத்து வாழ்க வளமுடன் என்று கூறிவிட்டு புன்சிரிப்போடு நகர

உதவியாளர் அவரை கைத்தாங்கலாக கூட்டிச் செல்கின்றார்.

நாங்கள் அவரையே மெய்மறந்து பார்த்துக்கொண்டிருக்கின்றோம். சமாதியை விட்டு கீழே இறங்கியதும் அவரிடம் சிறிய மாற்றத்தை காண்கிறோம். தோளில் மஞ்சள் துண்டை காணோம். சட்டையும் இல்லை.

அதற்குப் பதில் ஒரு கதர் துண்டை போர்த்தியிருந்தார். எங்கள் கண்களையே எங்களால் நம்ப முடியவில்லை. நாங்கள் இருவரும் ஓடிச்சென்று அவரின் உதவியாளரிடம் அய்யா இவர் ... என்று தயங்கினோம். உடனே அவர், அய்யாதான் இராமதாஸ் அண்ணா என்றார்.

எங்களுக்கு தூக்கிவாரிப்போட்டது. இவர்தான் அண்ணாவா? சற்றுமுன் எங்களுக்கு வேதாத்திரி மகரிஷியாக காட்சியளித்தாரே! என்று வியந்தபடி குருவே சரணம் என்று மீண்டும் அவரின் முன்னால் சென்று அண்ணாவின் காலில் விழுந்து எழுந்தோம்.

இப்போது எங்கள் முன் அண்ணா நிற்கிறார். பலமுறை நான் ஆஸ்ரமத்திற்கு வந்திருந்தாலும், இன்றுதான் அண்ணாவை முன்முதலாகப் பார்க்கிறேன். எங்களை புன்சிரிப்புடன் பார்த்தவர் குருநாதரை பார்த்தாச்சா? சாப்பிட்டுப் போங்க, என்றார்.

கடந்த சில நாட்களாக எங்களுக்குள் இருந்த சோகம், விரக்தி, அனைத்தும் எங்களை விட்டு மறைந்து போனது. மகரிஷியின் உடல் தான் மறைந்தது. மகரிஷி இருக்கின்றார். அண்ணா வடிவில் என்ற நம்பிக்கை வலுத்தது. எங்களுக்கு மட்டுமல்ல. பல பக்தர்களுக்கு அண்ணா மகரிஷியாக காட்சியளித்திருப்பதை அவர்களே கூற நாங்கள் கேட்டிருக்கின்றோம்.

ஆன்மீகத்தில் இதுபோன்ற சூட்சும நிகழ்வுகள் யாரேனும் ஒருவருக்குத் தான் நிகழும். இந்நிகழ்வு எங்கள் இருவருக்கும் எங்கள் முன்பாகவே நிகழ்ந்ததை எங்கள் பாக்கியமாக கருதுகின்றோம்.

அதன்பிறகு மெல்ல சகஜ நிலைக்கு திரும்பிய நாங்கள் தீவிரமாக ஆன்மீக பயிற்சியில் ஈடுபட ஆரம்பித்தோம். அடிக்கடி அண்ணாவை சந்தித்து ஆசி பெறுவதை வழக்கமாக வைத்திருந்தோம்.

மூன்றாம் ஆண்டு என் மனைவி கருவுற்றார்கள். அவர்கள் விரும் பிய உணவுப் பொருட்களை வாங்குவதற்குகூட அப்போது என்னிடம் பொருளாதாரம் இல்லை. அதுவே என்னை அதிகம் வாட்டியது.

ஒரு நாள் இரவு எனக்கு உறக் கம் வரவில்லை. மனைவியிடம்கூறி விட்டு தெருவில் உலாத்திக் கொண்டிருக்கின்றேன். தூக்கம் வருவதுபோல் தெரியவில்லை

அப்படியே நடந்து, நடந்து, நான் எப்பவும் ஏகாந்தமாய் அமர்ந்து தியானம் செய்யும் காவிரிக்கரையில் இருக்கும் மயானக்கரைக்கு வந்து விட்டேன்.

நாங்கள் குடியிருக்கும் வீட்டிற்கு பின்புறம் காவிரி ஆறு. ஆற்றைக் கடந்தால் மறுபுறம் மயானம். மயானத்தைக் கடந்தால் நான் சிறுவயதில் இருந்து வாழ்ந்த மேலக்காவேரி என்ற ஊர் வரும்.

என்னுடைய நான்காவது வயதில் பாண்டியநாடாகிய அம்மைய நாயக்கனூரில் இருந்து எங்கள் குடும்பம் சோழ நாடாகிய மேலக்காவேரிக்கு பிழைக்க வந்தது. 48 ஆண்டுகளுக்கு முன்பாக மின்சாரமே இல்லாத சிறிய

கிராமம் அது. அப்போதெல்லாம் வருடத்தில் எட்டு மாதம் காவிரில் தண்ணீர் தழும்பியபடி போகும். ஆற்றில் தண்ணீர் இல்லை என்றால் ஆற்றைக் கடந்தால் கும்பகோணம் வந்து விடும். ஆற்றில் தண்ணீர் சென்றால் பாலத்தை சுற்றி மூன்று கி.மீ நடக்க வேண்டிவரும்

எப்படி சென்றாலும் மயானத்தை கடக்காமல் செல்ல முடியாது. எனவே காலப்போக்கில் என்னைப் போன்ற சிறுவர்களுக்கு மயானம் என்பது சாதாரணமாகிப் போனது. அதிகபட்ச நேரங்களில் நாங்கள் அங்குதான் இருப்போம். ஆற்றங்கரையில் வெகு தூரத்திற்கு நீண்டு கிடக்கும் மயானத்தில் மா, கொய்யா, நெல்லி, இலந்தை என கனி மரங்கள் மண்டிக்கிடக்கும்.

தவிர வீட்டில் காய்கறி இல்லை என்றால் இங்குதான் பறிப்போம். பாகற்காய், பூசணி, பரங்கி, அவரை, புடலை என்று வளர்ந்து கிடக்கும். சிறுவயதில் இருந்தே அங்கு பழக்கம் ஆனதால் மயானத்து வெட்டியான் நடேசன் எங்களை ஒன்றும் சொல்வதில்லைதவிர அவரது மகன் கணேசன் எங்களுடன் பள்ளியில் ஒன்றாகப் படித்தான்.

சனி, ஞாயிறு பள்ளி விடுமுறை என்றால் நாங்கள் மயானத்தில்தான் இருப்போம். கருமாதிக்கு சமாதியில் படையல் போட்ட பொரி, கடலை, சர்க்கரை தான் எங்களுக்கு அந்நாளைய நொருக்குத் தீனி!

நாங்கள் தாமதமாகப் போனால் நடேசனே பத்திரமாக எடுத்து வைத்திருப்பார்.

ஒரு மூலையில் சடலம் ஒன்று எரிந்து கொண்டிருக்கும், இன்னொரு முலையில் ஒரு சடலத்தை நடேசன் புதைத்துக்கொண்டிருப்பார். நாங்கள் சென்றதும் நடேசன் வேலையை நிறுத்தாமல், குமரேசன் செட்டியார் சமாதி மாடத்திலே பொரி கடலை வச்சுருக்கேன் எடுத்து தின்னுங்க என்று குரல் கொடுப்பார். நாங்கள் சென்று பங்கு போட்டு தின்போம்.

சில நேரங்களில் நடேசன் முழுக்கக் குடித்திருப்பார். விளையாடிக் கொண்டிருக்கும் எங்களை அழைத்துக் கொண்டு ஒவ்வொரு சமாதியாகச் சென்று இவன் வாழும்போது எப்படி வாழ்ந்தான் தெரியுமா? இப்போது இங்கே அடங்கிக் கிடக்கின்றான். இதோ இவன் என்ன செய்தான் தெரியுமா என்று ஒவ்வொரு சமாதியாக கூட்டிச்சென்று கதை கதையாகச் சொல்வார்.

நல்லவனாக வாழ்ந்தவன் சமாதி மாடத்தில் இன்றும் விளக்கு எரிவதை சுட்டிக்காட்டுவார். கெட்டவனின் சமாதி உடைந்து பாழாய் கிடப்பதை காட்டி, போதையில் "முடிசார்ந்தவனும் முடிவிலே பிடி சாம்பலானதப்பாரடா" எனப்பாடுவார். நான் ஏன் இங்க வந்தேனுன்னு அடிக்கடி கேட்டுக் கங்கடா என்று வானத்தைப் பார்த்து கத்துவார்.

என் தகப்பனும், தாய்மாமனும், நான் மிகவும் நேசித்த என் நண்பர்கள் எழுவரும், குடந்தை பள்ளியில் நடந்த தீ விபத்தில் முக்தியடைந்த 96 தெய்வங்களும் அங்கேதான் புதைக்கப் பட்டிருக்கின்றார்கள்.

சிறுவயதில் இருந்தே பல அனுபவங்களைக் கொடுத்த அந்த மயானம் என்னைப் பொறுத்தவரை

"நந்தவனம்" தான். அங்கு அமர்ந்து சற்று நேரம் தியானம் செய்யலாம் என்று முயற்சித்தேன். முடியவில்லை. அதற்குப் பதில் அழுகை

யும் இயலாமையும்தான் வந்தது. யாரும் இல்லாத அந்த நடுநிசியில் வானத்தைப் பார்த்து ஓ ஞ்ஞ் என்று கத்தினேன். என்னை ஏன் இவ்வளவு சிரமப்படுத்திகிறாய். என் இறைவா! என்னால் முடியவில்லை. ஏதாவது செய்! இல்லை என்றால் என்னை உன்னிடம் கூட்டிக் கொள் என்றவாறு என் மனம் லேசாகும் வரை கத்தினேன்.

அடுத்த ஐந்து நிமிடத்தில் என்னை நானே தேற்றிக்கொண்டு கண்களை துடைத்துக் கொண்டு நிமிர்ந்து பார்க்கிறேன் எனக்கு முன்னால் ஓர் உருவம் நின்று கொண்டிருக்கின்றது. சட்டென்று பயந்த நான் சுதாரித்துக் கொண்டு யார் நீங்கள் என்றேன்.

அதற்கு நீ யார் என்று முதலில் சொல் என்று பதில் வந்தது. நான் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். உடனே அந்த உருவம் பேச ஆரம்பித்தது. நான் இந்த மயானத்தின் வெட்டியான் நடேசன்.

எனக்கு உண்மையிலேயே பயமாகி விட்டது. நான் சட்டென்று எழுந்து கொண்டு, நடேசனா அவர் இறந்து பத்து ஆண்டுகள் ஆகி விட்டதே என்றேன்.

ஆமாம், எனக்கு இந்த மயானத்தில் இன்னும் பத்து வருடங்களுக்கு வேலை இருக்கின்றது. ஆகவே நான் இங்குதான் இருப்பேன். நீ பயப்படவேண்டாம். நான் உன்னை பயமுறுத்த வரவில்லை. என் வேலையைத்தான் நான் பார்த்துக் கொண்டிருந்தேன். உனது அழுகுரல் கேட்டுத்தான் இங்கு வந்தேன். என்றார் நடேசன்.

என்னை உங்களுக்கு ஞாபகமிருக்கின்றதா? உங்கள் பையன் கணேசனும் நானும் பள்ளி நண்பர்கள் என்றேன் நான்.

எங்கோ கேள்விப்பட்டது போல் இருக்கின்றது. இருந்தாலும் மீண்டும் ஞாபகப்படுத்த வேண்டிய அவசியம்



இல்லை. அந்த ஞாபகங்கள் எல்லாம் என் உடலோடு சம்பந்தப்பட்டவை. நான் இறந்ததற்குப் பின்பு மெல்ல மெல்ல அழிந்துவிடும். இப்போது நான் ஆன்மா எனக்கும் இறைவனுக்கும் மட்டும் தான் தொடர்பு. அவரைத் தவிர வேறு யாரையும் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

இந்த உருவம் கூட உங்களுக்கு ஒரு செய்தி தெரிவிக்க வேண்டி எனக்கு கொடுக்கப்பட்டது. ஒரு சில நிமிடங்களில் மறைந்து விடும். அதற்குள் நான் கூறும் செய்தியை கேட்டுக் கொளுங்கள்.

நீங்கள் இங்கு வந்த காரியத்தை மறந்துவிட்டதாகத் தோன்றுகின்றது. இருளை விரட்ட வேண்டுமானால் ஒளியை கொண்டுவரத்தான் வேண்டும். அதை விட்டுவிட்டு இருளாய் இருக்கின்றதே என்று வருத்தப்பட்டால் அது தீர்வாகுமா?

நீங்கள் உங்கள் சற்குருவை அடையும் நேரம் வந்துவிட்டது என்பதை உங்களுக்கு சுட்டிக் காட்டவே நான் அனுப்பப்பட்டிருக்கின்றேன். உங்கள் சற்குரு, நீங்கள் யார், உங்களது வேலை என்ன? என்பதை விளக்குவார்.

அதன்பின் உங்கள் துன்பங்கள் விரைவில் முடிவிற்கு வர இருக்கின்றன.

எனவே உலகத்தின் புற துன்பங்களையும், இன்பங்களையும் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் நடக்கும் நிகழ்வுகளில் கவனம் செலுத்தவும். இன்னும் ஓராண்டில் நீங்கள் உங்களது பூர்வீகத்தை நோக்கி இடம் பெயர்வீர்கள். நன்மையே நடக்கும் நான் வருகின்றேன். என்று மறைந்தார் நடேசன்.

- (தொடரும்...)

SHIRDI SUBAYATRA TOURS

Regular Monthly trips to Shiridi, and places Nasik, Aurangabad, Pandarpur, Mantralayam, Rameswaram, Jyothirlingams, Kasi, Gaya, Triveni Sangamam, Saptashringari Amman Padam.

For Advance Booking Contact

Office: 19/7, Thambiah Road Extension,
West Mambalam, Chennai - 600 033.
Ph: 044-4804 1443, 94983 04551

Charges inclusive of Train/Flight Tickets Booking, Bus, Rooms, Tamil Guide

DIVYA DARSHANS

"ஸ்ரீ பாத ராஜம் சரணம் ப்ரபத்யே"

மிகவும் கடுமையான கலியின் களியாட்டத்தில் பலவிதமான இயற்கை சீற்றங் களினால் அல்லல்படும் நம் அனைவருக்கும் கலியுகத் தின் முதல் தத்த அவதாரியும் ஸ்ரீ ஷீரடி சாயிபாபா உருவில் என்றென்றும் நம்மை காத்து அருள்புரியும் ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் அருளிச்செய்த இந்த மாமந்திரத்தை அனுதினமும் ஜபம் செய்து முழுமையான பாதுகாப்பு வளையத்தில் நாம் திகழ்ந்திட...



"திகம்பரா திகம்பரா ஸ்ரீ சக்ர தத்தாத்ரேயா திகம்பரா"!

– என்ற நேர்மறை ஆற்றலைக் கூட்டும் மந்திரத்தை ஜபம் செய்ய வேண்டுகிறோம்.

இம்மந்திரத்தை தினமும் 108 முறை ஜபம் செய்ய வாய்வு மண்டலத்தில் உள்ள எதிர்மறை சக்தியின் தாக்கத்தில் இருந்து நம் அனைவருக்கும் பாதுகாப்பு கிட்டும் என்பது அனுபவப்பூர்வமான உண்மை.

"ஜய ஜய ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபா"

விபரங்களுக்கு; சுந்தர்சாய், 9789404451

தொடர் –II

சாய் சரவணன்

"அதி தேவதை"

சுந்தராபாய் தனது 20 வது வயதில் சற்குருவை தேடும் பயணத்தில் ஈடுபட்டு, சற்குருவின் தரிசனம் கிடைக்காமலே மீண்டும் பண்டரிபுரத்திற்கே வந்து விட்டதை கண்டோம். 1900 ல் இருந்து 1995 வரை பாரத தேசம் முழுக்க தன் பாதத்தைப் பதித்து பல சித்தர்களும், யோகிகளையும் தரிசித்து, ஆத்ம ஞானம் பெற்ற சித்த யோகினியாய் சந்திரபாகா நதிக்கரையில் தியான நிஷ்டையில் அமர்ந்திருந்தாள்.

சுந்தராபாயி பண்டரியை விட்டு சென்றதில் இருந்து, சுந்தராபாயை என்று காண்பேனோ என்ற ஏக்கத்தோடு வாழ்ந்திருந்தாள் பிக்குபாயி. வழக்கமாக காலையில் குளிப்பதற்காக நதிக்கரைக்குச் சென்றாள். அவள் செல்வதை சுந்தராபாயி கண்டு கொண்டாள் இருந்தும் பேசாமல் மவுனமாக இருந்தாள்.

பிக்குபாயி குளித்து முடித்து திரும்ப வருகையில், பிக்குபாயி என அழைத்தாள் சுந்தராபாயி. யார் என் பெயரை சொல்லி அழைப்பது என்று திரும்பிப் பார்த்தாள். அங்கே சுந்தராபாயைக் கண்டதும் ஆனந்தக் கண்ணீர் விட்டு அழுதாள். பிறகு அக்கா நன்றாக இருக்கின்றாயா? உன்னைக் கண்டு எத்தனை வருடங்கள் ஆகிவிட்டது. என்று வினவினாள்.

நான் நன்றாக இருக்கின்றேன். நீ எப்படி இருக்கிறாய்? என்று அவளை அனைத்துக் கொண்டாள். இரு பிரியமான தோழிகளும் நலம் விசாரித்துக்கொண்டே வீட்டிற்குச் சென்றனர்.

வீட்டிற்குச் சென்றதும் சுந்தராபாயி பூஜை அறைக்குச்சென்று தியானத்தில் அமர்ந்தாள். பிக்குபாயி அவளுக்கு உணவு சமைக்கத் தயாரானாள். சுந்தராபாயின் தியானம் பலமணிநேரம் நீடித்தது. பிக்குபாயி ஆச்சர்யம் அடைந்தாள். சுந்தராபாயின் தியானம் உணவு, நீரின்றி மூன்று நாட்களை கடந்தது. இருப்பினும் சுந்தராபாயின் முகம் சூரியனைப் போன்று பிரகாசமாக இருந்தது.

அவளது பிரகாசமான முகத்தைப் பார்ப்பதே இனம்புரியாத ஆனந்தமாக இருந்தது பிக்குபாயிக்கு. மூன்று நாட்களுக்குப் பின்பு கண்விழித்த சுந்தராபாயி, பிக்குபாயியைப் பார்த்து, எனக்கு பசிக்கின்றது. உணவு தருகின்றாயா எனக்கேட்டாள். உடனே பிக்குபாயி, அவளுக்கு உணவு பரிமாற இருவரும் இணைந்து உணவு உண்டு மகிழ்ந்தனர்.

சுந்தராபாயி, தன் தினசரி விட்டல் வழிபாட்டை வீட்டிலேயே செய்தாள். குளிப்பதற்கு மட்டுமே வீட்டை விட்டு வெளியேறி நதிக்கரைக்குச் செல்வாள். மற்ற நேரங்களில் பூஜை அறைக்குள்ளேயே, தன் சற்குருநாதரை காணவேண்டி தொடர்ந்து தவத்தில் இருந்தாள்.

பகவான் விட்டலின் வாக்கு பலிக்கும் நேரமும், காலமும் கனிந்தது. ஏராளமான மகான்களுக்கு, தங்களின் சற்குருவை காண வழிகாட்டிய பகவான் சுந்தராபாயை மட்டும் கைவிட்டு விடுவானா என்ன? நிச்சயம் இல்லை. சுந்தராபாயை

பகவான் சற்குரு சாயிநாதனாக வந்து ஆட்கொள்ளும் அற்புதக் கதையை இனி நாம் காணப்போகிறோம்.

நம் சற்குருநாதர் தன் பக்தர்களை எப்படி எல்லாம் ஆட்கொண்டார் என்பது பற்றியும், அவர்களது ஆன்மீக முன்னேற்றத்தை தூண்டிவிடும் வகையில் எப்போதும் தன் பக்தர்களை தன் நினைவாக இருக்கும்படி செய்ய வைத்து அவர்களது தகுதிக்கு ஏற்ப வழிநடத்தியதைப் பற்றி எல்லாம், சாயி சத்சரிதம், சாயிபாபாவின் வாழ்க்கை வரலாறு, சாயியின் திருவிளையாடல் போன்ற நூல்களில் இருந்து நாம் அறிந்து கொள்ளலாம்.

பாபா கூறுகின்றார், முந்தைய பிறவி ஒன்றில், கபர்டே, தீட்சித், பாபு சாகேப் ஜோக், சியாமா, தாதாகேல்கர், யாவரும் ஒரே இடத்தில் ஒன்றாக வசித்தோம். ஆகவே நான் என் பக்தர்களை அனைவரையும் ஒரே இடத்திற்கு வரும் படி இழுக்கின்றேன் என்கிறார். இதன் அடிப்படையிலேயே சாயிநாதர் சுந்தராபாயியை சீரடிக்கு இழுத்துவர திட்டம் தீட்டி லீலை புரியப் போகிறார்.

பாபா ஆன்மீக முன்னேற்றம் வேண்டி தாபத்தோடு தவிக்கும் ஆத்மாக்களையே உண்மையில் விரும்புகிறார். நம் சுந்தராபாயோ, என் சற்குரு நாதனை என்று காண்பேன் எனத் தீராத தவிப்போடு பண்டரியில் வாழ்கின்றாள். அவளது ஆன்மீகத் தவிப்பை சாந்தப்படுத்தி தன்னோடு இணைத்துக் கொள்ளவே பாபா ஆவலாக இருந்தார்.

தன்னுடைய மிகவும் பிரியமான பக்தரான நானா சாகேப் சாந்தோர்கரை இதற்கு பயன்படுத்திக் கொள்ள பாபா திட்டமிட்டார். பாபாவின் சிறந்த பக்தரான நானா சிறந்த பண்டிதர். தனது 20 வது வயதில் பட்டப்படிப்பை முடித்து அரசாங்க உத்யோகம் பெற்றவர். அகமத்நகர் ஜில்லா கலெக்டரின் தலைமை உதவியாளராக பணியாற்றி வந்தார். சாயி நாதருடைய லீலையால் அவருக்கு அகமத்நகரில் இருந்து பண்டரிபுரத்திற்கு மாற்றல் ஆனது.

பண்டரிபுத்தில் வாழும் பாக்கியம் பெற்றதை எண்ணி மகிழ்ந்த நானா, அதை முதலில் சாயியிடம் தெரிவிப்பதற்காக சீரடி சென்றார். சீரடியில் பாபாவைப் பார்த்ததும் பாபாவை விட்டு பிரிய மனமில்லாமல், நான் எப்படி உங்களை பார்க்காமல் பண்டரியில் வேலை செய்வேன் என்று விசனப்பட்டார்.

அதற்கு பாபா கூறினார், நானா நான் சீரடியில் மட்டும் இருப்பதாக எண்ணிவிட்டாயா? நான் எங்கும் உள்ளேன். அந்த விட்டலன் காரணமின்றி உன்னை பண்டரிக்கு அழைக்கவில்லை. உன்னால் அவனுக்கு ஒரு காரியம் ஆக வேண்டி யிருக்கின்றது. என்னை விட்டுவிட்டு நீ மட்டும் பண்டரிக்கு செல்வதாக எண்ண வேண்டாம். நானும் உன்னுடன் வருவேன் என உதி பிரசாதம் தந்து வழியனுப்பினார் பாபா.



ஒரு வழியாக நானாவை தன் லீலையால் பண்டரிக்கு அனுப்பிவிட்டார். நானாவும் பண்டரியில் குடியேறிவிட்டார். அங்கு தன் அலுவலக பணிகளை சிறப்பாக செய்து வந்தார். தன் ஓய்வு நேரங்களில் தன் பால்யகால நண்பர்களை சந்தித்து உரையாடுவது நானாவிற்கு வழக்கம்.

ஒரு சமயம் தனது நண்பரும் புகழ் பெற்ற வழக்கறிஞருமான கணேசன் அவர்களைப்பற்றிய பேச்சு வந்தது. அவரின் பேத்தி சுந்தராபாயும் தன் மகள் மீனாத்தாயியைப் போன்றே சிறிய வயதில் கணவனை இழந்து கைம் பெண்ணாகி விட்டதை எண்ணி வருத்தமுற்ற நானாவிற்கு அவளை சந்தித்து ஆறுதல் சொல்ல வேண்டும் என்ற உந்துதல் ஏற்பட்டது.

இந்த உந்துதலை நம் சற்குரு சா யிநாதரே நானாவிற்கு தந்ததை நாம் உணர்ந்து கொள்ளலாம். ஓய்வு நாள் ஒன்றில் சுந்தராபாயின் முகவரியை தெரிந்து கொண்டு அவளது வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டினார் நானா,

கதவைத் திறந்த பிக்குபாய், நீங்கள் யார் என்று விசாரிக்க, நானா விபரம் கூறவும், பெரியப்பா உள்ளே வாருங்கள் என உபசரித்து, பருக நீர் தந்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

எனக்கு சுந்தராபாயி அக்காவை



சிறுவயதில் இருந்தே தெரியும். அக்காவிற்கு திருமணம் நடந்தது கூட இன்னும் என் நினைவில் இருக்கின்றது. அதன் பிறகு அவள் வாழ்வில் நடந்த துயரங்களை அவளே தைரியமாக எதிர்கொண்டு தன்னையும் தேற்றிக்கொண்டு தன் தாத்தாவையும் தேற்றினாள்.

அதுசரி, என்னை எப்படி புரிந்து கொண்டு பெரியப்பா என அழைத்தாய் என்றார் நானா,

அக்கா ஒரு முறை பார்த்தால் யாரையும் மறப்பதில்லை. சிறு வயதில் உங்களை அவள் பெரியப்பா என்று அழைத்ததை என்னிடம் சொல்லி இருக்கின்றாள். சுந்தராபாயிக்கு தெரியாதது ஒன்றும் இல்லை. என்றவாறே பிக்குபாயி, சுந்தராபாயியின் திருமண வாழ்வின் துரதிர்ஷ்டம், தாத்தாவின் இழப்பு, அவளின் வைராக்கியம், விட்டல் வழிபாடு, பூசாரிகளுடன் ஏற்பட்ட மோதல், விட்டலனின் தரிசனம் பெற்றது, யாத்திரை செய்தது, அதில் அவளுக்கு கிட்டிய அனுபவங்கள் தற்போது அவளின் யோகினி நிலை வரைக்கும் கொட்டித்தீர்த்தாள் பிக்குபாய்.

நானாவோ, சுந்தராபாயின் இளம் வயதில் இவ்வளவு அனுபவங்களா? எப்பேர்பட்ட பக்தியும், பிரேமையும் இருந்தால் விட்டலனது தரிசனத்தை பெற்றிருப்பாள் என்று வியந்து நான் உடனே சுந்தராபாயை பார்க்க வேண்டுமே என்றார்.

பிக்குபாயோ, அக்கா மாடியில் பூஜை அறையில் தியானத்தில் இருக்கின்றாள். இப்போது விழிக்கும் நேரம் தான் வாருங்கள் நாம் மாடிக்குச் செல்லலாம் என நானாவை மாடிக்கு அழைத்துச் சென்றாள்.

இவர்கள் மாடிக்குச் செல்வதற்கும், சுந்தராபாய் தியானத்தில் இருந்து விழிப்பதற்கும் சரியாய் இருந்தது.

- (தொடரும்...)

ஓம் சாய்ராம்

"வாழ்வை வளமாக்கும் சாயி லிகித ஜபம்"

சாய் அன்பர்களே,



முயற்சி திருவினையாக்கும் என்பது வள்ளுவம். வாருங்கள் நாமும் இந்த லிகித நாம ஜெபத்தை ஊக்கத்துடன் முயன்று செயல்பாட்டில் ஆக்கம் காண்போம். சத்குரு சாய் மஹராஜ் திருவருளால் நம் வாழ்வில் மன அமைதியோடு கூடிய வெற்றியைக் காண்போம்.

நமது லிகித நாம ஜபம்
"ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்"

நம் எல்லோருடைய இல்லங்களிலும், உள்ளங்களிலும் ஒளி ஒலி வீசட்டும். இதுவரை (30.11.20) நாட்களாக தினமும் 108 முறை எழுதிவரும் நம் சாய் அன்பர்களுடன் இணைந்து சாய் மஹராஜ் திருவருள் பரிபூரணமாக நம்மை வழிநடத்த ப்ரார்த்திப்போம்.

'லிகித நாம ஜபம் மனித குலத்திற்கு மாமருந்து'

தொடர்புக்கு;
சுந்தர்சாய், செல்: 9789404451


சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

இம்மாத சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் செங்கல்பட்டு ஸ்ரீ அருணாசல யோகீஸ்வர சுவாமிகளின் சீவசமாதி தரிசனம் காண்போம் வாருங்கள்.

ஸ்ரீ அருளானந்த அருணாச்சல சித்தர்



ஸ்ரீ அருணாசல சுவாமிகள் 1924 ஆம் பிறந்தார். சிறுவயதில் இருந்தே இயற்கையாகவே ஆன்மீக நாட்டம் கொண்டவராக வளர்ந்தார. பிற்காலத்தில், அவர்களது குல தொழிலான இரும்பினால் ஆன ஆயுதங்களை செய்யும் கருமார் தொழில் எனப்படும் கொல்லுப்பட்டறை தொழிலில் ஈடுபட்டு வந்தார்.

திருமண வயது வந்ததும், செங்கல்பட்டு மாவட்டம் சிங்கப்பெருமாள் கோவில் அருகில் உள்ள கருநிலம் கிராமத்தைச் சேர்ந்த ஸ்ரீ பட்டம்மாள் என்ற மங்கையை மணம் முடித்தார்.

இனிய மணவாழ்க்கையின் அடையாளமாக மூன்று ஆண் குழந்தைகளையும், இரண்டு பெண்குழந்தைகளுக்கும் தந்தையானார்.

தன் மாமியார் ஊரான கருநிலம் கிராமத்திற்கு அடிக்கடி சென்று வரும்போது, அந்த கிராமத்தில் அரக்கோணம் ஸ்ரீ

அருளானந்த சித்தர் அவர்கள் தன் சீடர்களுக்கு போதனைகள் வழங்குவதை கண்ட நம் அருணாச்சல சுவாமிகள் அவரிடம் சென்று ஆசி வாங்கினார்.

ஸ்ரீ அருளானந்த சுவாமிகள், நம் சுவாமிகளுக்கு உண்மை நிலையை விளக்கிக்காட்ட, மனம் தெளிந்த சுவாமிகள் ஸ்ரீ அருளானந்தரிடமே குரு உபதேசம் பெற்று சீடரானார்கள்.

ஸ்ரீ அருணாச்சல சுவாமிகளின் மூன்றாவது மகனும், சுவாமிகளின் சீடனுமான ஸ்ரீ ஞானசேகரன் சுவாமிகளை சந்தித்து உரையாடும் பேறு பெற்றேன். அவரே ஸ்ரீ அருணாச்சல சுவாமிகளின் வரலாற்று குறிப்புகளை எனக்கு வழங்கி ஆசி வழங்கினார்கள்.

ஸ்ரீ அருணாச்சல சுவாமிகளுக்கு நூற்றுக்கும் மேற்பட்ட சீடர்கள் உண்டு. அகத்தியரின் மரபு வழி வந்தவர். தான் கூறும் ரகசியங்களை யாரிடமும் பகிர்ந்து கொள்ள கூடாது என்று சத்தியம் வாங்கிக் கொள்வார். இவரது சீடர்களில் ஒருவர் ஸ்ரீ பிரம்ம ஜோதி சுவாமிகள். இவருடைய சீவசமாதி செங்கல்பட்டு மாவட்டம் இருங்குன்றம் பள்ளியில் இருக்கின்றது.


ஸ்ரீ அருணாச்சலம் சுவாமிகள் தன்னிடம் வரும் நோயாளிகளை மந்திர செபத்தின் மூலம் உடனடிமாக குணப்படுத்துவார்.

ஸ்ரீ அருணாச்சல சுவாமிகள் உருவ வழிபாட்டை பின்பற்றாதவர். வள்ளல் பெருமானார் வழியில் அருட்பெரும் ஜோதி வழிபாட்டை கடைபிடித்தவர். தனது சீடர்களுக்கும் அதையே பயிற்றுவித்தவர்.தன் வாழ்வின் கடைசிவரை குருவழிபாட்டையே கடைபிடித்தவர்.

மேல்வல்லம் அச்சுதானந்த சுவாமிகளின் சீடர் கடப்பா சிகானந்த சுவாமிகள், அவரின் சீடர் அரக்கோணம் ஸ்ரீ அருளானந்த சுவாமிகள், அவரின் சீடர் நம் அருணாச்சல சுவாமிகள் என்ற குரு பரம்பரையில் வந்தவர். குருவின் அருளால் பல அற்பு தங்களைப் புரிந்தவர். குருவின் வழியில் மெய்ஞானத்தைப் பரப்ப பல சீடர்களை உருவாக்கியவர்.

அந்த வகையில் சுவாமிகளின் மூன்றாவது மகன் ஸ்ரீ ஞானசேகரன் சிறந்த மெய்ஞானச் சீடராகி இறைச்சேவை புரிந்து வருகின்றார். அவரே தனது தந்தையும், குருவுமான சுவாமிகளுக்கு வருடந்தோறும் குருபூஜை செய்து வருகிறார்.

சுவாமிகள் 19.11.1999 கார்த்திகை மாதம் 3 ஆம் தேதி சமாதி நிலையை அடைந்தார்.



பற்பல சூழ்நிலைகளின் காரணமாக பல சித்தர்களின் சமாதிகள் மயானங்களில் அமைந்துள்ளது. அந்த வகையில் நம் சித்தர் ஸ்ரீ அருணாச்சல யோகீஸ்வருடைய சமாதியும் செங்கல்பட்டு மயானத்தில் சிறப்புடன் அமைந்துள்ளது.

சித்தர்களை வணங்கி அவன்தாள் பணிவோம்!

சீரான வாழ்க்கையை சிக்கலின்றி பெறுவோம்!

<u>சீவபீட முகவரி:</u>

ஸ்ரீ அருணாச்சல யோகீஸ்வர சுவாமிகள் சீவ பீடம், என். ஜி. ஒ. நகர் மயான பூமி, என். ஜி. ஒ. நகர், மேலையூர் பஞ்சாயத்து, செங்கல்பட்டு மாவட்டம்.

சென்னையில் இருந்து வருபவர்கள் செங்கல்பட்டு அரசு மருத்துவ மனையை கடந்த உடன் இடது புறமாக என். ஜி. ஒ. நகருக்கு செல்லும் வழியில் சென்றால் மயானபூமியைக் காணலாம். அங்கே நம் சித்தரின் சீவ பீடத்தை தரிசிக்கலாம்.

பேரூந்து வழித்தடம்: சென்னை செங்கல்பட்டு.

இறங்குமிடம்: செங்கல்பட்டு பேரூந்து நிலையம்

இங்கிருந்து ஷேர் ஆட்டோவில் சீவபீட ஆலயத்தை அடையலாம்

புகைவண்டி வழித்தடம்:

சென்னை கடற்கரை செங்கல்பட்டு

இறங்குமிடம்:

செங்கல்பட்டு இரயில் நிலையம்

இங்கிருந்து ஷேர் ஆட்டோவில் சீவபீட ஆலயத்தை அடையலாம்.

- (தொடரும்)

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன்
M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

சீரடி யாத்திரை

சாய் தியானாலயா பிரார்த்தனை மையம் சார்பில் சீரடி புனித யாத்திரை

7 வது யாத்திரை வரும் 13.7.2022 அன்று புறப்படுகின்றது

6 நாட்கள்: *இரயில், பேரூந்து, தங்கும் அறை, தமிழக உணவு உட்பட நபருக்கு ரூ.6000/*

பார்க்கும் இடங்கள்: *சீரடி சாய் மந்திர், கந்தோபா ஆலயம், லெண்டிபார்க், அருங்காட்சியகம்,அனுமன் கோவில் அப்துல்லா காட்டேஜ், லெட்சுமிபாய் வீடு, மகல்சாபதி வீடு, பயாஜி கோதே வீடு, அவுரங்காபாத் எல்லோரா, கிரிஷ்னேஸ்வர் ஜோதிர்லிங்கம் சிவநேசன் சமாதி, சகோரிஉபாசினி மகராஜ், கணபதி கோவில்.*

8 வது யாத்திரை, செப்டம்பர் 21.9.2022 அன்று புறப்படுகின்றது

4 நாட்கள். *இரயில், பேரூந்து, தங்கும் அறை, தமிழக உணவு உட்பட நபருக்கு ரூ.4200/*

பார்க்கும் இடங்கள்: *சீரடி சாய் மந்திர், கந்தோபா ஆலயம், லெண்டிபார்க், அருங்காட்சியகம்,அனுமன் கோவில் அப்துல்லா காட்டேஜ், லெட்சுமிபாய் வீடு, மகல்சாபதி வீடு, பயாஜி கோதே வீடு,சிவநேசன் சமாதி, சகோரி உபாசினி சமாதி, கணபதி கோவில்,*

9 வது யாத்திரை, ஜனவரி 16.01.2023 அன்று புறப்படுகின்றது

6 நாட்கள். *இரயில், பேரூந்து, தங்கும் அறை, தமிழக உணவு உட்பட நபருக்கு ரூ.6500/*

பார்க்கும் இடங்கள்: *சீரடி சாய் மந்திர், கந்தோபா ஆலயம், லெண்டிபார்க், அருங்காட்சியகம்,அனுமன் கோவில் அப்துல்லா காட்டேஜ், லெட்சுமிபாய் வீடு, மகல்சாபதி வீடு, பயாஜி கோதே வீடு, நாசிக் திரியகம்பேஸ்வர், பஞ்சவடி, சீதா குகை, காலாராம், சிவநேசன் சமாதி, சகோரி, கணபதி கோவில்.*

ஆறு நாட்கள் குரு ஸ்ரீராம் சாய் அவர்களுடன் சத்சங்கம், தியானம், யோகாவுடன் ஓர் ஆனந்த பயண அனுபவம்.

விபரங்களுக்கு: **சாய் தியானாலயா**

9941816692, 88258 31068

மரணத்தை வென்ற மகாவீரர்

"மகாவீரர்" கி.மு. 599 வருடம், இந்தியாவின் பீகார் மாநிலம் வைசாலிக்கு அருகிலுள்ள "குண்டல புரம்" என்ற ஊரின் அரசனாகிய சித்தாத்தர் என்பவருக்கும், ராணி திரிசாலாவுக்கும் மகனாகப் பிறந்தார். இவருக்குப் பெற்றோர்கள் இட்டப் பெயர் "வர்த்தமானர்" ஆகும்.

அரசக் குடும்பத்தில் பிறந்ததால், மிகவும் செல்வாக்காக வளர்க்கப்பட்டார். இருப்பினும் அச்சிறுவயதிலே ஆன்மீகநாட்டம் கொண்டவராகவும், தியானத்திலும், தன்னை அறிவதிலும் அதிக ஈடுபாடு கொண்டவராக விளங்கினார்.

பின்னர் யசோதரை என்ற பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு, இல்லற வாழ்க்கையை நடத்தி வந்தார். சமணத்தில் அதிக ஈடுபாடு கொண்டவராக விளங்கிய அவர், பிறகு கி.மு. 569 ல் இல்லற வாழ்விலிருந்து விலகி, தன்னுடைய முப்பதாவது வயதில் அரச வாழ்க்கை மற்றும் குடும்ப வாழ்க்கையைத் துறந்து, துறவறம் மேற்கொண்டார்.

அதன்பிறகு அவர் முற்றிலும் வாய்மையும், நேர்மையுமான பிரம்மச்சரிய வாழ்வை வாழ்ந்தார். இறுதிவரை தமக்கென எந்த பொருளையும் வைத்துக் கொள்ளாமல் அவர் வாழ்ந்தார்.

மகாவீரர் ஜைன மதத்தை நிறுவியவர் அல்ல. அவர் ஜைன மதக்



கொள்கைகளை திருத்தி அமைத்தவர். ஜைன மதத் தத்துவத்தின்படி காலம் பல பருவங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பருவத்தின் இறுதியிலும் இருபத்தி நான்கு தீர்த்தங்கரர்கள் ஜைன மதக் கொள்கைகளை மக்களுக்குப் போதிப்பர்.

மகாவீரர் இருபத்தி நான்காம் தீர்த்தங்கரர். தீர்த்தங்கரர் என்றால் "பிறவிக்கடலை கடப்பதற்கு உதவி செய்யும் ஆன்மீக வழிகாட்டி" என்று பொருள்படும்.

மகாவீரருக்கு, வர்த்தமானர், சன்மதி என்ற பெயர்களும் உண்டு. அவர் தமது எட்டாவது வயதில் அகிம்சை முதலான பன்னிரெண்டு

விரதங்களை பின்பற்றினார். அவர் தம் பெற்றோருக்கு அடங்கி நடந்து, மிகுந்த சிரத்தையோடும், பக்தியோடும் பணிவிடைகள் செய்தார். அவர் திறமையாகவும் ஆட்சி செய்யக்கூடிய நிபுணத்துவம் பெற்றிருந்தார்.

மகாவீரர் ஆத்ம தியானத்தில் முழ்கியிருந்தார். உலக இன்பங்கள் நிலையில்லாதவை என்றும், நிலையான பேரின்பத்தை அடைவதற்கு துறவு ஒன்றே வழிவகுக்கும் என்றும் அவர் அறிந்திருந்தார்.

இவ்வளவு இளம் வயதில் மகா வீரரிடம் இருந்த நல்ல குணங்களைக கண்டு மக்கள் மிகுந்த ஆச்சர்யம் அடைந்தனர். தியானத்தில் அவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. இசை, இலக்கியம் ஆகிய கலைகளையும் அவர் வளர்த்தார். இளவரசர் வர்த்த மானரின் முப்பதாண்டுகள் இவ்வாறு கழிந்தன.

தாம் கணக்கற்ற பிறவிகளை கடந்து சென்று கொண்டிருப்பதாக அவர் தியானத்தின் மூலம் அறிந்து கொண்டார். எவ்வளவு பிறவிகள் பயனின்றி கழிந்து விட்டன. இப்பிறவி யிலும் பயனின்றி முப்பதாண்டுகளை கழித்துவிட்டேனே! எந்த ஒரு தவத்தையும் நான் பயிலவில்லையே! தூய பேரறிவை நான் அடைய வேண்டும் என்றால் அதற்காக இந்த உலகத்தை துறக்க வேண்டும் என்று எனக்கு தோன்றவில்லையே! எல்லா கேடுகளுக்கும் மூலமாக உள்ள மோகத்தை நான் இன்னும் அழிக்க வில்லையே! என்று சிந்தித்தார்.

இளவரசர் இவ்வாறாக சிந்தித்து அளவற்ற மன வருத்தம் அடைந்தார்.

உலக பொருட்கள் அனைத்தையும் துறக்க அவர் முடிவு செய்தார். அக் கணமே அதை செயல்படுத்தினார். எப்படி எனில் தாம் உடுத்தியிருக்கும் துணியைக்கூட விட்டுவிட்டார். நண்பர் களிடமும், உறவினர்களிடமும் கொண்டிருந்த பாசத்தை அவர் துறந்தார்.

ஜைன மத நூல்களின்படி ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய கருத்துக்களைப் பற்றி அவர் சிந்திக்கலானார்.

1.உலகியல் பொருட்கள் அனைத் தும் நிலையற்றவை.

2.ஆத்மா மட்டுமே உண்மை. அதுவே புகலிடமாகும்.

3. உலகம் ஆதியும் அந்த முல்லாதது.

4. ஆத்மாவிற்கு துணை எதுவுமில்லை. ஆத்மாவிற்கு துணை ஆத்மாவே,

5. சரீரம், மனம் முதலியவை ஆத்மாவில் இருந்து முற்றிலும் வேறு பட்டவை.

6. ஆத்மா பரிசுத்தமானது.சரீரம்,



மனம் ஆகியவை பரிசுத்தமில்லாதவை.

7.ஆன்மாவின் பந்தத்திற்கு காரணம். நமது உடலும் மனமும் செய்யும் செயலே!

8. ஒவ்வொரு உயிரும் இந்த வினை தனக்குள் பாய்வதை நிறுத்த வேண்டும்.

9. வினை முற்றிலும் நீங்கினால் முக்தி வாய்க்கும்.

10.நிறைவு பெற்ற ஆகாயங்களின் மிக உயர்ந்த உச்சியில் முக்தி பெற்ற ஆத்மாக்கள் தங்குகின்றன.

11. இவ்வுலகில் மனித பிறப்பும், ஆன்மாவின் இயல்பை அறிய செய்யும் தவமும் மிகப் பெரிய வரப் பிரசாதங்கள்.

12. நிறைஞானம் பெற்றவரால் விளக்கிக்கூறப்பட்டுள்ள
மும்மணிகளான நன்நம்பிக்கை, நல்லறிவு, நற்செயல் ஆகியவற்றை பின்பற்றுவதே நல்லொழுக்கம் ஆகும்.

மகாவீரர் இந்த பன்னிரெண்டு கருத்துக்களைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்த பிறகு இறுதியில் வீட்டை துறக்க வேண்டும் என்று முடிவு செய்தார்.


மகாவீரரின் அன்னை, என் அன்புள்ள மகனே! விரதங்களின் கடுமையை உன்னால் தாங்கிக்கொள்ள முடியாது. அதற்கு இன்னும் காலம் இருக்கிறது. நாட்டை ஆட்சி செய்வதில் நீ உன் தந்தைக்கு உதவி செய்ய வேண்டும். இன்னும் சிறிது காலம் கழிந்த பிறகு நீ துறவியாக ஆகலாம் என்று வேண்டினார்.

மகாவீரரோ, வணக்கத்திற்குரிய தாயே! உலகப் பொருட்கள் எல் லாம் நீர்க்குமிழிகளைப் போல் மறையக் கூடியவை. நோய், துன்பம்,வேதனை, மரணம், ஆகியவற்றின் உறைவிடமாகிய இந்த உலகத்தில் மகிழ்ச்சியை எப்படி பெற முடியும்? எனவே நான் இந்த உலகத்தை விட்டு செல்ல வேண்டும் என்று விடை கூறி தன் தாயின் அனுமதியைப் பெற்றார்.

மகாவீரர் தன்னுடைய செல்வங்களை எல்லாம் ஏழை மக்களுக்கு தன் கைகளாலேயே வாரி வழங்கினார். பின்னர் அவர் காட்டுக்குச்சென்றார். அவர் தான் அணிந்திருந்த ஆடைகளைக்கூட களைந்து விட்டு முற்றிலும் நிர்வாண நிலையை அடைந்தார்.

அவர் வடக்கு திசையை நோக்கி நின்று கொண்டு, "சித்தர்களுக்கு வணக்கம்" என்று கூறினார்.தன்னுடைய தலைமுடியை தன் கைகளாலேயே ஒவ்வொன்றாக பறித்தெடுத்து மொட்டைத் தலையுடன் துறவியானார்.

மனித வாழ்க்கையின் அர்த்தம் தேடி, சுமார் பனிரெண்டு ஆண்டுகள் தியானம் மற்றும் ஆன்மீகத் தேடலில் ஈடுபட்ட மகாவீரர் அவர்கள், “சாலா” என்னும் மரத்தடியில் ஞானம் பெற்றார். அதிலிருந்து அவர் “மகாவீரர்” என



அழைக்கப்பட்டார். மகாவீரர் என்றால், 'பெரும்வீரர்' என்று பொருள் ஆகும்.

வனத்திற்குள் மகாவீரர் கடுமையான விரதங்களையும், தியானத்தையும் கடைபிடித்தார். பல நாட்கள் உண வின்றி உண்ணாநோன்பு இருந்தார். ஆத்மாவின் தூய நிலையைப் பற்றி அறிந்து கொள்ள தியானத்தில் ஈடுபட்டார்.

சொர்ககலோகப் பெண்களால் மகாவீரருக்கு பல சோதனைகள் ஏற் பட்டது. அழகான மகளிர் கூட்டம் அவரை சூழ்ந்து கொண்டு அவரது தவத்திற்கு இடையூறு செய்தது. ஆயினும் மகாவீரர், அசைவற்று சலனமற்று இருந்தார்.

பன்னிரெண்டு வருட கடும் தவத்திற்குப்பின் அவர் நிறை ஞானத்தை அடைந்தார். தான்கண்ட உண்மைகளை உலகத்திற்கு எடுத் துரைக்க விரும்பிய மகாவீரர், இந்தியா முழுவதும் ஆன்மீகப் பய ணம் மேற்கொண்டு, தாம் அறிந்த உண்மைகளை மக்களுக்கு போதித்தார்.

வெறும் கால்களில், துணிகள் ஏதும் இன்றி, அவர் போதித்த போதனை களைக் கேட்க அனைத்துத்தரப்பு மக்களும் திரண்டது மட்டுமல்லாமல், சமண சமயம் இந்தியாவெங்கும் தீவிரமாக பரவத்தொடங்கியது. இதனால், சமண மத குருமார்கள் வரிசையில் மகாவீரர் இருபத்தி நான்காவது தீர்த்தங்கரராகப் போற்றப் பட்டார். இவரே சமண சமயத்தில் தோன்றிய கடைசி தீர்த்தங்கரும் ஆவார்.

இருபத்திநான்கு தீர்த்தங்கரர்களில் கடைசி தீர்த்தங்கரர் என சமணர்களால் போற்றப்படும் மகாவீரரின் போதனை கள், அன்பையும், மனிதநேயத்தையும், அகிம்சையையும் போதிக்கும் உன்னத கோட்பாடுகளாக விளங்குகிறது. மகாவீரர், 'ஒவ்வொரு உயிரினத்திற்கும் ஓர் ஆத்மா உண்டென்றும், அது, தனது நல்ல அல்லது கெடுதல் செயல்களின் விளைவாக "கர்மா" என்னும் வினைப் பயன்களை அடைய நேரிடும்' என போதித்தார்.

இதிலிருந்து விடுபட, மூன்று ரத்தினங்கள் என அழைக்கப்படும் 'நன்னம்பிக்கை, நல்லறிவு, நற்செயல்' போன்றவற்றை கடைப்பிடித்தால், 'சித்த நிலையை அடையலாம்' என வும் போதித்தார். மேலும், 'எந்த உயிரி னத்திற்கும் தீங்கு விளை விக்காமல் இருத்தல், உண்மையை மட்டும் பேசு தல், திருடாமை, பாலுணர்வு இன்பம் துய்காதிருத்தல், பணம் பொருள் சொத்துகள் மீது ஆசை கொள்ளாமல் இருத்தல்' என ஐந்து பண்புகளும் ஜைன மதத்தின் உறுதிமொழிகளாக விளங்கின.

உண்மையை சொல்லப்போனால் மகாவீரர் அகிம்சையை தன்னுடைய கொள்கையாக போதித்த மாபெரும் சீர்த்திருத்தவாதியாக போற்றப்படுகிறார்.

அனைத்து உயிர்களிடத்திலும் அன்புகாட்ட வேண்டும், பிற உயிர்க ளுக்கு தீங்கு செய்யாமையும், கொல் லாமையுமே அறநெறி எனக் காட்டி அகிம்சை வழியையும், அன்பு வழி யையும் மக்களுக்கு உணர்த்தி, சமண சமயத்தின் திருவுருவமாகவே வாழ்ந்த மகாவீரர் கி. மு. 527ல் பீகாரி லுள்ள "பாவா" என்னும் இடத்தில் தன்னு டைய 72 வது வயதில் சமாதியானார்.

காற்றை சுவாசிக்கும்

கல் கருடன்

பூமியில் 70 கிலோ எடையுள்ள ஒருவர் 400 கிலோ மீட்டர் உயரத்தில் வானவெளியில் 63 கிலோ எடையுடன் இருப்பார். இதன்மூலம் ஒரு பொருள் பூமியை விட்டு பறந்தால் அது தனது எடையை இழக்கிறது என்று தெரிகிறதல்லவா?

கையில் உள்ள பொருளை எப்படி வீசினாலும் அது நிலத்தை அடையும் வரை எடையற்ற நிலையில் தான் இருக்கும். அது போல பூமியில் இருந்து அனுப்பப்படும் செயற்கை கோள்கள்

நானூறு கிமீ. உயரத்திற்கு மேல் கொண்டு செல்லப் பட்டு, கிடை மட்டமாக மணிக்கு 27,700 கிமீ வேகத்தில் வீசி எரியப்படுகிறது.

அது பூமியை அடையும் வரை எடையற்ற நிலையில் இருக்கும், அதில் உள்ளவர்களும் எடையற்றே இருப்பார்கள். செயற்கை கோளை அப்படியே விட்டு விட்டால், அது பூமியை நோக்கி விழும், புவியீர்ப்பு சக்தியால் அதற்கும் பூமிக்கும் உள்ள தொலைவு குறைந்து கொண்டே வரும்,

எனவே, அது பூமியை நோக்கி விழுந்தாலும் அதற்கும் பூமிக்கும் உள்ள தொலைவு குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.



விழனும் ஆனா விழக்கூடாது! பூமி கோள வடிவில் இருப்பதால் அதன் மேற்பரப்பு சமதளமாக இருக்காது,

ஒவ்வொரு எட்டு கி.மீ தொலைவு செல்லும்போதும் பூமி உருண்டை ஆதலால்நேர்கோட்டில் இருந்து 5 மீட்டர் விலகி இருக்கும். உயரத்தில் இருந்து எந்த ஒரு பொருளை விட்டாலும் முதல் வினாடியில் 5 மீ கீழே இறங்கியிருக்கும்.

இவை இரண்டையும் சேர்த்துப் பார்த்தால் ஒரு விஷயம் புலனாகும்.

என்னவென்றால் ஒரு பொருளை

பக்க வாட்டில் வினாடிக்கு எட்டு கி.மீ வேகத்தில் எறிந்தால் அது ஒருபோதும் தரையைத் தொடாது.

பூமியை சுற்றிக்கொண்டே இன்னொறு நிலவாக செயல்படும். புவியீர்ப்பு கோளை பூமி நோக்கி இழுத்துக் கொண்டே இருக்கும். நாம் நிற்பது, நடப்பது அனைத்து பொருட்களும் பூமியில் இருப்பது அனைத்திற்கும் காரணம் புவியீர்ப்பு சக்தியே.

அந்த புவியீர்ப்பு சக்தியை எதிர்த்து

நிறுவப்பட்டதே கல் கருட பகவான்.

கோச்செங்கட்சோழன் முயற்சி யால் உருவான கோவில் ஸ்ரீனிவாசப் பெருமாள் நாச்சியார் கோயில். மன்னர் கோச்செங்கட்சோழன்

தேவசேனாபதியாரிடம் தனது கோவிலில் சிலை செய்ய நல்ல சிற்பி தீவை எனக்கூறினார்.

மயூரசன்மன் என்ற சிற்பி

தேவசேனாபதியாரின் சிற்பக் கூடத்தில் பயின்ற மாணவன்.

முப்பத்தியிரண்டு சிற்ப நூல்க ளையும், பதினெட்டு உப நூல்களை யும் அழகாக பாடமாக அறிந்தவன்.

'யந்த்ர சர்வாஸ' மந்திரத்தையும்


நல்ல முறையில் கற்றவர்.

மன்னருக்கு மயூரசன்மனை அறிமுகம் செய்து வைத்து இவன் எனது பிரதான சீடன். உனது ஆலயப் பணிக்கு இவனை அழைத் துக் கொண்டு போகலாம் என்ற தேவசேனாதிபதி முதலில் இவனை எங்கு அழைத்துச் செல்லப் போகிறீர்கள்?" என்று கேட்டார்.

திருநறையூருக்கு" என்றார் மன்னர்.

திருநறையூரின் ஆலயத்தை மன்னனுடன் அடைந்த மயூரசன் மனின் பார்வை திருக்குளத்தை ஒட்டி அடுக்கப்பட்டிருந்த பாறைகளின் மேல் விழுந்தது. பார்த்தவுடன் அவை கங்க நாட் டிலும் குவளாலபுரியிலும் விளையும் நீரோட்டமிக்க அடுக்குப்பாறைகள் என்பது புரிந்தது அவனுக்கு.

மன்னவா, இந்த ஆலயத்தில் நான் செதுக்க வேண்டிய சிற்பம் எது?" என கேட்டார். இங்கு எம்பெருமானுக்கு திருமணத்தை நடத்திவைத்த பெரிய திருவடியான கருடனைத்தான். மூலவரின் உயரமான ஆகிருதிக்கு ஏற்ற வடிவில் வடிக்க வேண்டும்" என்றான் மன்னன்.





மன்னவா, இந்த அடுக்குப் பாறை கள் பூமியின் நீரோட்டங்களுக்கு நடுவிலிருந்தவை. இவற்றுள் சில வற்றில் நீரோட்டம் கடந்து சென்ற மெல்லிய பாதைகள் இருக்கும். அவற்றைத் தேர்ந்தெடுத்து, சுத்தப்படுத்தினால் காற்று ஊடே செல்லும் பாதைகிட்டும். காற்று சென்று வரக்கூடிய வழி கிடைத்தால் இவை சுவாசிக்கும் பாறைகளாகும்.

மனிதருக்கு சப்த நாடிகள் உள்ளது போல் இவற்றுக்கும் நாடி கள் உண்டு. காற்றை சுவாசிக்கும் எந்த ஜீவனும் பூமியின் விசையை எதிர்த்து நடமாடக்கூடியது. நாம் செய்யக் கூடிய சிற்பத்தின் நாசியில் அந்தப்பாதை வருமாறு அமைத்தால், சந்திரனின் ஒளியை உள்வாங்கும் சந்திர காந்தக் கல்லைப்போல் இவை பூமியின் விசைக்கெதிராக சக்தி பெறும். பின்னர், 'யந்திரசர்வாஸ' மந்திரமும் வடிக்கும் சிற்பத்துக்குண்டான மந்திரத்தையும் பிரயோகிக்கும்போது அவை உயிர்பெற்று விடும்." என்று விளக்க மன்னன் ஆச்சர்யப் பட்டான்.

சிற்பியின் திறமையைக்கண்டு மன்னன் அவன் விருப்பப்படி செயல்பட அனுமதித்தான். மன்னனுடன் ஆலயத்துள் நுழைந்த மயூரசன்மன் மூலவரின் இடப்புறம் உள்ள பகுதியைத் தேர்ந்தெடுத்தான்.

மன்னவா, அந்தப் பாறைகளைக் கொண்டு இங்கு மண்டபத்தை அமைக்கிறேன். இங்கிருந்து பிராகாரத்தில் இறங்கும் வழி நெடுக நான் கூறும்படி அந்தப் பாறைகளைக் கொண்டு பாதை அமைத்து விடுங்கள்.

மண்டபத்தின் பீடத்தில் பூமியின் விசை எதிர்ப்புறம் இருக் கும்படி அமைத்து விட்டால், கருட சிற்பத்தின் எடை மிகக் குறைவாகவே இருக்கும். அதே

பாறைகளைக்கொண்டு வெளிப் பிராகாரம்வரை பாதையாக அமைத்து விடலாம்" என்றான் மயூரசன்மன்.

சரி மயூரா, அதனால் என்ன நிகழும்?" என்றான் மன்னன்.

மன்னா, மூலவரின் உயரத்துக்கும் ஆகிருதிக்கும் ஏற்றபடி சுமக்கும் கருடனுக்கும் உருவம் அமைத்தால் ஆயிரம் மடங்கு எடையும் அதிகமாக இருக்கும். ஆனால், அந்த எடை இந்த மண்டபத்தில் பத்து மடங்கு குறை வாகவே இருக்கும். கருடன் புறப்பாடு காணும் போது கருடனைத் தூக்க நால்வரே போதும். மண்டபத்தை விட்டுக் கீழிறங்கினால் தூக்குபவர் எண்ணிக்கை இரு மடங்காக வேண்டும்.

பாதை நெடுக நான் அமைக்கும் அடுக்குப்பாறைத் தளத்தில் ஈர்ப்பு விசை பாதிப்பாதியாகக் குறைந்துகொண்டே வரும். எனவே, மேற்கொண்டு செல்லச் செல்ல கருடன்தன் சுய எடையைப் பெற்றுவிடுவார். அப்போது தூக்குபவர் எண்ணிக்கையும் இரண்டிரண்டு மடங்காக உயர்ந்துகொண்டே செல்லும். மீண்டும் மண்டபத்துக்குத் திரும்பி வரும்போது அதே எண்ணிக்கையில் எடை குறைந்துகொண்டே வரும்" என்றான் மயூரசன்மன்.

செங்கட்சோழனின் முகத்தில் மலர்ச்சி தெரிந்தது. அப்படியே செய்துவிடு மயூரா. உனக்கு உதவியாக கல் தச்சர்களையும், ஆட்களையும் இப்போதே ஏற்பாடு செய்கிறேன்" என்றான் மன்னன்.

தமிழகத்தின் சிற்பக்கலை அதிசயங்களில் ஒன்றாக விளங்கும் மயூரசன்மன் வடித்த அந்தக் கல் கருடன் இன்றளவும் அப்படியே நாச்சியார்கோயில் என்று அழைக்கப்படும் திருநறையூரில் இருந்து அருள்பாலிக்கிறார்.

மார்கழியிலும் பங்குனியிலும் பிரம்மோத்ஸவம் நடைபெறுகிறது.

கருட சேவையின்போது பிரம் மாண்டமான அந்தக் கல் கருடனை முதலில் நால்வரும்,

மண்டபத்தை விட்டு இறங் கியதும் எண்மரும், பின் வெளிப் பிராகாரத்துக்கு வரும்வரை இரண் டிரண்டு மடங்காக அறுபத்தி நான்கு பேர் வரை தூக்கி வர வேண்டியிருக்கிறது.

அதுமட்டுமின்றி, ஆலயத்தை விட்டு வெளி வந்ததும், கல் கருடனின் மேனியில் மனிதர்களைப் போல் வியர்வை வழியத் தொடங்குகிறது!

சுமார் மூன்று டன் எடைக்கு மேலே உள்ள கருட பகவானின் எடையை

பூமியிலேயே குறைத்தது எப்படி

படிப்படியாக அதிகரித்து வெளி வருவதில் வீதியுலா முடிந்து திரும்ப உள் செல்கையில் படிப்படியாக குறைவதும் புரியாத புதிரான விந்தைகள்தானே!

வாய்பிருந்தால், இல்லை, இல்லை, வாய்ப்பை வரவழைத்துக் கொண்டு கும்பகோணம் அருகே இருக்கும் நாச்சியார் கோவில் சென்று கல் கருட சேவையை வாழ்வில் ஒருமுறை யேனும் பார்த்து விடுங்கள்.

இறை தேடல்



பொத்தம் பொதுவாய் இறைத்தேடல் என்ற பெயரில் எதையாவது தேட வேண்டும்,

ஏதாவது கிடைக்கும் என்ற நினைப்பில் நீங்கள் இறை வனை காண தேடினால், உங்கள் நேரமும் முயற்சியும் விரையமாகுமே தவிர எவ்வித பலனும் தராது.

முதலில் இறைவனை அடைந்தால் நமக்கு இவை எல்லாம் கிடைக்கும் என்ற எண் ணத்தை அகற்ற வேண்டும்.

இது மிக முக்கியமானது. எதையும் எதிர்பார்த்து நீங் கள் இறைவனை காண முயற்சிக்க கூடாது. அந்த எதிர்பார்ப்பே இம்முயற்சிக்கு முதல் தடை.

நீங்கள் ஒன்றை சரியாக புரிந்துகொள்ள வேண்டும். இந்த பிரபஞ்சத்தையும், உங்களையும் படைத்தவனை தானே நீங்கள் தேடு கின்றீர்கள். அப்படி என்றால் நீங்கள் கேட்காமலேயே அவன் உங்களுக்கு கொடுத்துள்ளவை களுக்கு முதலில் நன்றி செலுத்துங்கள்.

எல்லாம் அறிந்து கொடுப்பவ னிடம், பாத்திரமறிந்து அதற்கு தக்கவாறு தருபவனிடம் என்ன கேட்க வேண்டி உள்ளது. நமக்கு தேவையானவற்றை, அருகதைப்பட்டதை அவனே அறிந்து தர வல்லவன்.

அவன் தரவில்லை என்றால் நாம் அதை பெற்றுக்கொள்ள இன் னமும் நம்மை தகுதிப்படுத்திக் கொள்ள வில்லை என்பதல்லவா அர்த்தம்.

எதையும் எதிர்பாராமல் முழுமை யாக நம்மை அவனிடத்தில் சரண டைந்து ஒப்படைத்து விட்டால் மட்டுமே போதுமானது. பின் நமக்கு தேவையானது அனைத்தும் அவனே வாரிவழங்குவான். உங்களுக்கு வழி காட்டுவான்.

இது உங்களுக்கு அதிக்கப்படியான நம்பிக்கையாக தோன்றலாம். ஆனால் நாம் நம்பிக்கை வைப்பது நம்மை படைத்தவனிடம். நமக்கு நமது மனதை கட்டுப்படுத்த இந்த அதீத நம்பிக்கை இங்கு அவசியம் தேவை.

பக்தியே நம்பிக்கை. நம்பிக்கையே

பக்தி. இரண்டாவதாக, நாம்தேடும் இறை சக்தி புனிதமானது என்பதால், அதை நாம் அடையும் முயற்சி தூய்மையானதாக இருக்க வேண்டு மல்லவா.

நமது உள்ளும் புறமும் தூய்மை யானதாக இருந்தால், இறை சக்தியை நாம் தேட வேண்டாம், அதுவே நம்மை தேடி வரும் என்பதே உண்மை.

புறத்தூய்மையை பராமரிப்பது எளி தானது. ஆனால் அகத்தூய்மையை பராமரிக்க வேண்டும் என்றால், நமது முழுமன ஒத்துழைப்பு இல்லாமல் சாத்தியப்படாது.அகத்தூய்மை என்றால் என்ன என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

நமக்கு நாம் உண்மையாய் இருக்க வேண்டும். இப்படி நாம் உண்மையாய் இருப்பதால், நம்மை யாருடைய இகழ்வும் புகழ்தலும் பாதிக்காது.நமது மனசாட்சியின் வழிகாட்டுதலின்படி நடந்து கொள்ள வேண்டும்.

நம் எண்ணங்கள் நல்லவைகளாக இருக்கவேண்டும். இந்த நல்லெண் ணங்கள், நல்ல ஆக்கபூர்வமான அதிர் வலைகளை நம்மில் உருவாக்கும். ஒவ்வொரு நாளும் காலையில் அன்றைய பொழுதின் விடியலை காண வைத்தமைக்கு அந்த இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

நம்மால் முடிந்த அளவு பிறருக்கு, நம் தகுதிக்கு ஏற்ப உதவிகள் செய் வோம். அதிகமாக ஏழைகளுக்கு உத வுங்கள். மற்றவர் வாழ்வில் ஒளி ஏற்று வதை விட, இறைவனை காண வேறு சிறந்த வழி கிடையாது.

ஏழையின் எதார்த்தமான சிரிப்பில் இறைவனை காணலாம். நீங்கள் உதவ எத்தனை பேர் 'உங்களை' இறைவனாக பார்க்கின்றனர் என்பது விளங்கும். மூன்றாவதாக, நான் இறை வனை காண போகிறேன், காண வேண்டும், தேடிக்கொண்டிருக்கிறேன் என நினை பதை தவிர்த்து, நான் இறைவனுடன் ஒன்றாகி, என்னுள் உள்ள இறைவனை உணரப்போகிறேன் என மாற்றி சிந்தியுங்கள்.

இறைவன் உண்மையில் உங்க ளுடன், உங்கள்உள்ளில்தான் இருந்து கொண்டிருக்கின்றார்.இறைவன் என்னுள்ளேயே இருக்கின்றார் என்ற எண்ணமே, உணர்வே, நமது எல்லா செயல்களையும், எண்ணங்களையும் மாற்றி, நல்வழிப்படுத்தி, அவனை, அந்த ஜோதியை, ரூபமில்லா சக்தி நிலையில் உள்ளவனை, உங்களுக் குள் தெளிவாக காண வழி செய்யும்.

எல்லாவற்றிற்கும் மேலாக உங்களுக்குள் தான் இறைவன் இருக்கின்றார் என்ற உணர்வே உங்களது தன்மையை மாற்றி உங் களை இறைநிலைக்கு உயர்த்தி சென் றுவிடும்.இது ஒவ்வொருவருக்கும் தனித்தனியான அனுபவமாக தான் இருக்கும்.

ஒருவருக்கு கிடைத்த அனுபவம் உங்களுக்கும் கிடைக்கும் என்பது நிச்சயமில்லை.உங்களுக்கு முற்றிலும் வேறுமாதிரியான அனுபவமாக இருக் கலாம். சுயமாக உள்ளுணருதல் தான் உண்மையான அனுபவம்.

மற்றவை எல்லாம் வெறும் வழி காட்டிகள் மட்டுமே. இப்படி நீங்கள் உங்களது தகுதியை உயர்த்திக் கொண் டால் வெகு விரைவில் இறைவனை உணரலாம். இறைவனோடு உறவாட வும் இயலும்.

கடவுளுக்கு நன்றி.

தவம் செய் !

இருள் இருந்தால் அதை எப்படி போக்குவது? இருளை நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால், நம்மால் ஒளியை கொண்டு வர முடியும். நாம் ஒரு விளக்கை கொண்டுவந்து ஏற்றினால், இருள் தானே ஓடி விடும்.

அதை போல, நாம் முன் செய்த பாவத்தை ஒன்றும் செய்ய முடியாது. செய்த நல்வினையும், தீ வினையும் பாவ புண்ணியமாக மாறி இந்தப் பிறவியில் இன்ப துன்பங்களைத் தரும்.

இப்பிறவியில் இன்பம் துன்பமாக வந்து நிற்கும் பாவத்தை என்ன செய்வது? பிடித்துத் தள்ள முடியுமா?

வேண்டாம் என்று பயந்து ஓட முடியுமா?

எப்படி விளக்கின் முன்னால் இருள் நிற்காதோ அது போல தவத்தின் முன்னால் பாவம் நிற்காது.

நம்மால் பாவத்தை ஒன்றும் செய்ய முடியாது. ஆனால், தவம் செய்ய முடியும். தவம் செய்தால், பாவம் ஓடி விடும்.

சரி, இருள் விலகி விட்டதே என்று விளக்கை அணைத்தால் என்ன ஆகும்?

ஓடிய இருள் உடனே வந்து விடும். அது போல, தவம் செய்வதை நிறுத்தினால் பாவம் மீண்டும் வந்து விடும். விளக்கில் ஒளி குறைந்தால் இருள் வருவது போல, தவம் குறைந்தால் பாவம் வரும்.

தவம் செய்வதை ஒருகாலும் நிறுத்தக் கூடாது என்பது கருத்து. நல்ல காரியங்களை எப்போதோ ஒரு தரம், நம் வசதிக்கு செய்வதும், நிறுத்துவதும் கூடாது.

மந்திர தொடர்பு

முதலில் தோன்றிய ஒலி "ஓம்". ஆண்டவன் முதலில் "ஓம்" என்ற ஒலியாகவே பரிணமித்தான். "ஓம்" என்ற ஒலியின் அதிர்வாக இருக்கும் ஆண்டவனுடன் தொடர்பு கொள்ளவிரும்பினால், நீங்கள் உங்கள் இதய ரேடியோவை அந்த அலைவரிசைக்கு ஒத்திசைவு செய்து கொள்ள வேண்டும்.

ஆண்டவன் தன் சக்தியை,தன் அழகை, தன் அன்பை, தன் அருளை, "ஓம்" அலை வரிசையில் ஒலிபரப்பி கொண்டு இருக்கின்றான். நீங்கள் அதைக்கேட்க வேண்டுமானால், எந்த அலைவரிசைக்கு உங்கள் ரேடியோவின் குமிழை திருப்ப வேண்டும். "ஓம்" என்ற அலை வரிசைக்குத்தானே!

அதனால்தான் மந்திர செபம் முக்கியமானதாக கூறப்படுகின்றது. மந்திர செபம் உங்களை தெய்வீக அலையுடன் நேரடியாக இணைக்கும். நீங்கள் பிற சாதனைகளை செய்யா விட்டாலும் மந்திர செபத்தை விடக் கூடாது. அது உங்களுக்கு பெரிதும் உதவும்.

ஒரு நாளைக்கு மூன்று முறை யாவது "ஓம்" என்ற ஒலியோடு தியா னம் செய்ய வேண்டும். அப்போது தான் உங்கள் இதய ரேடியோவை குறிப்பிட்ட அலைவரிசையில் நிலைபெறச் செய்ய முடியும்.

எலைட் எண்டர்பிரைசஸ்

தொப்பம்பட்டி பிரிவு, HDFC பேங்க் அருகில், MTP ரோடு,
கோயம்புத்தூர் - 641 017. செல்: 98434 40806

Authorized Distributor: GS Caltex

Authorized Dealer:
Castrol | SERVO | MAK LUBRICANTS | Shell Lubricants | MOTUL | AMARON | SF SONIC

GST No: 33BMOPS1392A1Z3

ELITE ENTERPRISES









GS Caltex
Castrol

P.Sivasaravanan B.E.,
9843440806

Products

- Automobile Engine Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

ELITE ENTERPRISES

All Two Wheeler & 4 Wheeler Batteries Available Here

SF SONIC
AMARON
LASTS LONG. REALLY LONG.









HOME UPS AVAILABLE

ஆட்டோ மொபைல் ஆயில், இண்டஸ்ட்ரியல் ஆயில், க்ரீஸ், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள், வீட்டு உபயோக UPS, பேப்பரிகள் கிடைக்கும்.

கருணை கடவுள்

பாபா தன் பக்தர்களிடம் கொண்டுள்ள தீவிரமான அன்பையும், கவனிப்பையும், பற்றி மகல்சாபதியின் புதல்வரான மார்தாண்டன் தனது சொந்த அனுபவங்களின் மூலம் விவரிக்கின்றார்.

ஒரு முறை மார்தாண்டின் தாயார் தன் சகோதரனைக் காண நந்தூர் என்ற ஊறுக்குச் சென்றிருந்தார். வழக்கம் போல் மகல்சாபதி துவாரகாமாயியில் பாபாவிற்கு சேவைகள் செய்து கொண்டிருந்தார்.

திடீரென்று பாபா, "அர்ரே, பகத் என் பக்தர்களில் ஒருவருக்கு பிளேக் கட்டி வந்து மிகவும் அவஸ்தையில் இருக்கிறார்". எனக்கும் கூட என் பிட்டத்தில் கட்டி வந்து விட்டது. சீக்கிரமே எனக்கு சரியாகிவிடும். என்றார்.

பாபாவின் பின்புறத்தில் பிட்டத்தில் பெரிய கட்டி புடைத்து இருந்ததை மகல்சாபதியால் மிகத் தெளிவாக காணமுடிந்தது. அது பாபாவிற்கு மிகுந்த வலியைக் கொடுத்திருக்க வேண்டும். எனவே அவர் உட்காரக்கூட முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டார். இதனால் மகல்சாபதி மிகவும் கவலையடைந்தார்.

ஆனால் பாபா அவரிடம், "பகத் கவலைப்படாதே! இரண்டு மூன்று நாட்களில் இது உடைந்துவிடும்" எனக்கு கூடிய சீக்கிரம் குணமாகி விடும் என்றார்.

அப்பொழுது மகல்சாபதிக்கு எந்த பக்தருடைய கட்டியை பாபா ஏற்றுக் கொண்டு சிரமப்படுகின்றார் என்பது தெரியாது. எனினும் பாபா தன் பக்தர்களின் நோய், நொடிகளை தாம் ஏற்று அனுபவிக்கிறார் என்பதும், அதன் மூலம் தம் பக்தர்களை வலியில் இருந்தும், வேதனையில் இருந்தும் விடுவிக்கிறார் என்பதையும் அறிந்திருந்தார்.





இரண்டு நாட்களுக்குப் பிறகு பாபா கூறியதைப் போன்று அந்த கட்டி உடைந்திட, பாபா வலியில் இருந்து நிவாரணம் பெற்றார்.

இந்நிகழ்ச்சி நடந்து மூன்று நாட்களுக்குப் பிறகு, மகல்சாபதிக்கு அவரது மனைவியிடம் இருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் அவர் தனது பிட்டத்தில் ஒரு கட்டி தோன்றியதையும், அதன் வலி தாங்க முடியாததாக இருக்கவே பாபாவிடம், நிவாரணத்திற்காக பிரார்த்தித்ததாகவும், பாபாவிடம் வேண்டுதலை சமர்பித்த உடனேயே, வலி சுத்தமாக இல்லாமல் போய் விட்டதாகவும், இரண்டு நாட்களுக்குப்பிறகு அந்தக் கட்டி உடைந்து, தற்போது முழுமையாக சரியாகிவிட்டது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அப்பொழுதுதான் மகல்சாபதிக்கு தன் மனைவி பாபாவிடம், பிரார்த்தித்தனால் பாபாவே, அந்தக் கட்டியை தாம் ஏற்றுக்கொண்டு வலி இல்லாமல் செய்து நிவாரணப் படுத்தியிருக்கிறார் என்பதும் தெரிய வந்தது.

பாபாவின் அளப்பரிய அன்பையும், கருணையையும், எண்ணி மனம் நெகிழ்ந்தவராய், தன் மகன் மார்த்தாண்டனிடம், உன் அம்மாவிற்கு நிவாரணம் அளிப்பதற்காக, அவளுக்கு வந்த கட்டியையும், வலியையும், தாமே ஏற்றுக் கொண்டார் பாபா. ஆதலால் தான் உன் அம்மா விரைவாக குணமடைந்திருக்கின்றார்.

நம் மீது அன்னையைப்போல் அன்பு செலுத்தும் நம் கடவுள், பகவான் பாபா தன்னை நம்பும் பக்தர்களுக்காக அவ்வளவு கஷ்டத்தையும் தாமே அனுபவித்துள்ளார் என்று கூறி, பாபாவை நம்புகின்றவர்கள் கடவுளின் அரவணைப்பில் உள்ளார்கள் என்பதை நீ என்றும் மறவாதே என்று கூறினார்.

மூன்று அணா... மூன்று லட்சமான கதை!



பாபுராவுடைய வாழ்க்கை மிகவும் போராட்டமாகவும், ஏராளமான இன்னல்களும்,துன்பங்களும் நிறைந்ததாக இருந்தது. ஆனால் பகவான சாயி பாபாவின் கருணையால் அவரிடம் இருந்த வெறும் மூன்று அணா மூன்று லட்சமாகிப் பெருகியது.

பாபுராவ் புனேக்கு அருகில் உள்ள சஸ்வத் என்னும் ஊரில் வசித்து வந்தார். அவர் சிறுகுழந்தையாக இருக்கும் போதே அவருடைய பெற்றோர்கள் இயற்கை எய்தி விட்டார்கள். துரதிர்ஷ்டமாக இந்த வாய்ப்பை பயன் படுத்திக்கொண்டு அவருடைய பங்காளிகளும், உறவினர்களும், அவருக்கு சேரவேண்டிய அவரின் தந்தையின் சொத்துக்களை அபகரித்துக் கொண்டு அவரை அம்போவென கைவிட்டு விட்டனர்.

எனவே பணம் இல்லாததினால் அவர் பள்ளிப்படிப்பை பாதியில் நிறுத்த வேண்டியதாயிற்று. மேற்கொண்டு வாழ்க்கையை தள்ள வேண்டியதற்காக சிறு வயதிலேயே வேலைக்குச் செல்ல வேண்டி கஷ்ட சூழ் நிலைக்கு ஆளானார் பாபுராவ்.

அவருடைய தாய்மாமன் களில் ஒருவர் சீரடியில் வசித்து வந்தார். அவருக்கு சீரடியில் சொந்தமாக கரும்புத் தோட் டங்களும், வயல்களும் இருந்தன. அவற்றில் இருந்து அவர் சர்க்கரை தயாரித்து பொருளீட்டி வந்தார். அவர் பாபாவிடம் மிகுந்த பக்தி கொண்டவர்.

அவர் அடிக்கடி பாபுராவிடம் பாபாவின் லீலைகளைப் பற்றி புகழ்ந்து பேசுவார். இதைக் கேட்டு பாபு ராவும் பாபாவின் பக்தராக மாறிப்போனார். அவர் பாபாவின் தரிசனத்தை பெறுவதற்கு ஏங்கினார்.

எனவே சீரடி செல்வதற்காக கஷ்டப்பட்டு பணம் சேகரித்து கோபர் காவ்னுக்கு ஒரு இரயில் டிக்கெட் வாங்கி விட்டார். இரயில் அகமது நகர் வந்தபோது, சீரடி சென்று பாபாவின் தரிசனத்தை பெறும் வரையில் எதையும் உண்பதில்லை என்று விரதம் பூண்டார்.

அதன்படி கோபர்காவ்ன் வந்து இறங்கி மூன்று மைல்கள் குதிரை வண்டியில் பயணித்து கோதாவரிக் கரையு அடைந்தார். அப்போதுதான் தன்னிடம் மூன்று அணாக்கள் மட்டுமே மிஞ்சியிருப்பதை கவனித் தார். அது சீரடிக்கு பயணிக்கப் போது மானதல்ல என்பதையும் உணர்ந்தார்.

எனவே அங்கிருந்து சீரடிக்கு கால்நடையாகவே தன் பயணத்தை தொடர்ந்தார். சீரடிக்கு வரும் வழியில் தன் தாய்மாமன் வீடு இருந்ததால் பாபுராவ் தன் தாய் மாமன் வீட்டிற்குச் சென்றார். அவருடைய அத்தையோ அங்கு சாப்பிட்டுவிட்டு பயணத்தை தொடரும்படி கேட்டுக் கொண்டார்.

பாபுராவ் பாபாவை தரிசிக்காமல் உண்பதில்லை என்ற தன் விரதத்தை அவரிடம் கூறி விடை பெற்றுக் கொண்டு சீரடியை நோக்கி நடக்கத் தொடங்கினார். சீரடியில் லெண்டித் தோட்டத்தினருகே தன் மாமாவை சந்தித்தார். அவரும் பாபுராவை சாப் பிட்டு விட்டு பிறகு பாபாவை தரிசிக்க போகும்படி அழைத்தார்.

ஆனாலும், பாபுராவ் தன் விரதத் தில் மிக உறுதியாக இருந்தார். அவருடைய மாமா அவரிடம் ஒரு ரூபாய் கொடுத்து அதை வைத்தாவது போகும் போது உணவு சாப்பிட்டு போகும் படி கேட்டுக் கொண்டார். பாபுராவ் அந்த ஒரு ரூபாயை பெற்றுக் கொண்டு மசூதியைச் சென்றடைந்தார்.

பாபாவை பார்த்தவுடனே அவரின் தேஜஸான தோற்றத்தைக் கண்டு அவர் மனதில் ஆனந்தம் பொங்கி பெருகியது. அவர் ஓடிச்சென்று துவாரகாமாயியின் படிகளில் ஏறி, பாபாவின் பாதங்களில் தன் தலையை வைத்தார். அவரைத் தன்னருகில் அமரச் செய்த பாபா, அவரிடம் கனி வோடு பேச ஆரம்பித்தார்.

பின் அவரிடம் தட்சணை





கேட்டார். பாபுராவ் தன்னுடைய ஏழ்மை நிலையை குறிப்பிட்டு தன் இயலாமையை பாபாவிடம் தெரிவித்தார். அப்போது பாபா நீ ஒரு ரூபாயை வைத்துக் கொண்டு இல்லை என்று பொய் சொல்லுகிறாய்? உன் பையைப் பார் என்றார்.

பாபுராவ் தன் பைக்குள் கையை விட்டு தான் மறந்துவிட்டிருந்த ஒரு ரூபாய் நோட்டை எடுத்து பாபாவிடம் சமர்ப்பித்தார்.

இப்படி சீரடியில் பாபாவிடம் இர்ந்து அவர் பெற்ற அனுபவம் அவரை சீரடியி லேயே நிரந்தரமாக தங்கும்படி செய்துவிட்டது. தன் மாமாவின் நிலத்தில் கடுமையாக உழைத்த பாபுராவ், தினந்தோறும் பாபாவை தரிசனம் செய்தார்.

அவருடைய கடின் உழைப் பிற்கு நல்ல பலன் கிட்டியது. அந்த நிலத்தில் கரும்பு விழைச்சல் அமோகமாக இருந் தது. எனவே ஏராளமான சர்க்கரை தயார் செய்யப்பட்டு, மிக அதிகமாக விற்பனை செய்யப்பட்டு நல்ல லாபம் கிடைத்தது.

இவ்வாறு பாபுராவ் தான் கஷ் டப்பட்டு சம்பாதித்த அனைத்து செல்வத்தையும் தன் மாமாவிடம் ஒப் படைத்தார். ஒருநாள் மாமாவினுடைய நண்பர் ஒருவர் அவர்களைச் சந்தித் தார். அபரிதமாக மகசூல் கண்டிருந்த அவர்களது வயல், தோட்டம், துறவு ஆகியவற்றை கண்டு அவர் மிகவும் வியப்பில் ஆழ்ந்தார்.

புஞ்சை நிலமாக கிடந்த தரிசு நிலத்தை, வளம் கொழிக்கும் நஞ்சை பூமியாக எப்படி மாற்றினீர்கள் என்று அவர்களிடம் வினவ, உடனே தன் மருமகனை சுட்டிக்காட்டிய மாமா, எல் லாம் பாபுராவின் கடின உழைப்பே காரணம் என்று கூறினார்.

அப்போது அந்த நண்பர், பாபு ராவை தன்னோடு பங்குதாரராக சேர்ந்து கொள்வாரா என்று கேட்க, அதற்கு பாபுராவும் ஒத்துக் கொண்டார்.

தினந்தோறும் பாபுராவ் தன் மாமா வின் நிலத்தில் கடினமாக பணியாற்றி விட்டு அதன் பின் கோபர்காவ்ன் சென்று அங்கும் பொழுது சாயும்வரை உழைப்பார். அவருடைய கடின உழைப்பின் பயனாக அந்த ஆண்டின் இறுதியில் அவருக்கு ஒரு லட்ச ரூபாய இலாபம் கிட்டியது.

சட்டைப் பையில் வெறும் மூன்று அணாவுடன் சீரடிக்கு வந்த பாபுராவ் இன்று ஒரு லட்சாதிபதி ஆகிவிட்டார். பாபாவின் பேரருளினாலே இது சாத்தி யமாயிற்று என்று பாபுராவ் நன்கு உணர்ந்திருந்தார்.

அருகில் உள்ள கிராமம் ஒன்றில் ஒரு வீட்டை சொந்தமாக வாங்கிய பாபுராவ் வாழ்நாள் முழுவதும் தினந் தோறும் சீரடிக்கு வந்து பாபாவின் தரிசனத்தை பெறத் தவறியதில்லை.

அனைத்தையும் சுமக்காதே !



துறவிகள் இருவர் தொடர்ந்து பெய்த மழையினால் ஒரு குடிசையின் கீழ் நின்று கொண்டிருந்தனர். மழை நின்றதும் தங்களது இருப்பிடத்தை நோக்கி செல்லும்போது, வழியில் ஓர் அழகான இளம் பெண் சாலையைக் கடக்க முடியாமல் தவித்துக் கொண்டி ருந்தாள்.

இதைக்கண்ட துறவிகளில் ஒருவர், "என்னாயிற்று பெண்ணே? ஏதேனும் உதவி தேவையா?"என்று கேட்டார்.

பதிலுக்கு அந்தப் பெண், "நான் என் தோழியின் திருமணத்துக்குச் செல்ல உள்ளேன். ஆனால், இந்தச் சாலை முழுவதும் சேறும் சகதியுமாக உள்ளது. நடந்து சென்றால் என் அழகிய உடை பாழாகிவிடும்" என்று வருந்தினாள்

"கவலைப்படாதே, என் தோள் களின் மீது ஏறிக்கொள். நீ சேர வேண்டிய இடத்தில் உன்னைச் சேர்த்து விடுகின்றேன்" என்று அவளுக்கு உதவி புரிந்தார்.

திரும்பி வரும் வழியில் மற்றொரு துறவி கோபமாக இருப்பது போல தோன்றியதால். ''ஏன் என் மீது கோப மாக உள்ளீர்கள்?'' என்று கேட்க, அதற்கு அவர் "நாம் ஒரு துறவி என்பதை மறந்துவிட்டு அந்தப் பெண்ணை எப்படித் தொட்டுத் தூக்கலாம்? இது தவறில்லையா என்றார்

உதவி செய்த துறவி, "தூக்கிய அந்தப் பெண்ணை அப்போதே நான் இறக்கி விட்டு விட்டேன், நீங்கள்தான் அந்தச் சம்பவத்தை உங்கள் மனதை விட்டு இறக்காமல் சுமந்துகொண்டு இருக்கிறீர்கள்" என்று கூறினார்.

நாமும் நமது வாழ்வில் பிறர் ஏற்படுத்திய காயங்களை மனதில் தூக்கிக்கொண்டு செல்கின்றோம். எது முக்கியம் எது தேவையற்றது என்பதைப் பகுத்துப் பார்க்கத் தெரிந்துவிட்டால், வாழ்வு என்றென்றும் ஆனந்தமே.

நான் யார்?

அண்ணாமலையில் இருக்கும் அருணாச்சலம், வேங்கடராமன் எனும் திருப்பெயரில் திருச்சுழி எனும் தலத்தில் அவதரித்தது. மீண்டும் பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி எனும் திருநாமத்தோடு அருணாசலத்திலேயே வாழ்ந்த பகவான் ரமணரின் அவதார நோக்கத்தை உற்று நோக்கினால் நமக்கு கிடைப்பது ஒரேயொரு பதில்தான்.

அதாவது பகவான் தமது வாழ்வு முழுவதும் ஒரேயொரு உபதேசத்தை கூறிக் கொண்டேயிருந்தார்.அதுதான் "நான் யார்? எனும் ஆத்ம விசாரம்.

ஏன் நான் யார் என்பதை அறிய வேண்டும் என்கிற கேள்விக்கான பதிலைத்தான் விதம்விதமாக பல பாடல்களிலும், உபதேச நூல்கள் மூலமாகவும் உணர்த்தியிருக்கிறார்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக மௌன உபதேசத்தின் மூலமாக ஆலமரம் கீழ் விளங்கும் தட்சிணா மூர்த்தியாக அமர்ந்தும் பிரம்மத்தை போதித்தார்.மௌனத்தினால்தான் பிரம்மம் பிரகடனம் செய்யப்படுகிறது என்று உபநிஷதம் கூறியதையே தன் அனுபூதியில் நின்று காட்டினார்.

எனக்கு பிரட்சனை என்று கூறிய பக்தரிடம், "ஆமாம், பிரச்னை என்று யார் சொல்வது" என்று திருப்பிக் கேட்டார். "நான்தான் சொல்கிறேன்" என்று பதில் வந்தது பக்தரிடம்

"அந்த நான் யார் என்று பார்" என்று திருப்பிக் கேட்டு மடக்கினார்.

ஒரு கணம் இந்த பதிலைக் கேட்டவர்கள் திகைத்தார்கள். என்ன இது? நான் யார் என்று எப்படி என்னையே கேட்டுக் கொள்வது என்று குழம்பினார்கள். மீண்டும் பகவானை பார்த்தார்கள். "பகவானே, நான் யார் என்று எப்படி கேட்டுக் கொள்வது" என்று புரியாது கேட்டபோது அழகாக பகவான் விளக்கினார்.

"நான், நான், நான்,என்று சொல் கிறாய் அல்லவா?அந்த நான் யார்? என்று சற்று உள்ளே பாரேன் என்றார்.

இந்த நான் எனும் எண்ண விருத்தி எங்கிருந்து வருகிறது என்று கவனத்தை உள்முகமாகத் திருப்பேன்.

இந்த உடலை நான் என்று சொன்னால் தூக்கத்தில் உடலைக் குறித்த நினைவு இல்லை அல்லவா? ஆனால், சுகமாகத் தூங்கினேன் என்று மறுநாள் சொல்கிறாயே, அப்போது இந்த தூக்கத்தை யார் அனுபவித்தது?

விழித்திருக்கும்போதும் இந்த நான் உள்ளது. உடலும், உலகமும் மறைந்த தூக்கத்திலும் இந்த நான் என்பது இருக்கிறது. எனவே, இந்த நான் எனும் உணர்வு எங்கு உற்பத்தியாகிறது என்று தேடினால் மெல்ல இந்த நான் தன்னுடைய பிறப்பிடமான ஆத்மாவிற்குள் சென்று ஒடுங்கும்" என்று விளக்கினார்.

எங்கேயோ கடவுள் இருக்கிறார்.

அவரை காண்பது மிகவும் கடினம்.

அது யாருக்கோ சிலருக்குத்தான் முடியும். வீட்டைத் துறக்க வேண்டும்.

குடும்பத்தை விட்டு ஓடிவிட

வேண்டும் என்றெல்லாம் வற்புறுத்தவே இல்லை.

"பகவானே, கடவுளை அறிவது எப்படி" என்று கேட்டால் அவரது பதில்,

''கடவுளை அறிவது இருக்கட்டும்.

உன்னை நீ யார் என்று தெரிந்து கொண்டு விட்டு அதற்கு அன்னியமாக, அதற்கு அப்பால் கடவுள் என்கிற விஷயம் தனியே இருக்கிறதா என்று பார். எனறே உபதேசித்தார்.

இந்த கேள்வியை கேட்பவன் யார் என்று தன்னையே ஏன் கேட்டுக் கொள்ளக் கூடாது" என்று ஞான மார்க்கத்தை போதித்தார்.

மீண்டும், மீண்டும் பகவானிடம் நான் யார் என்கிற ஆத்ம விசாரத்தை எப்படி செய்வது என்று கேட்கப் பட்டது...


மகரிஷிகளும், பொறுமையாக,

"அப்பா, ஓர் இருட்டு அறையில் இருக்கிறாய்.இருட்டில் எதுவும் தெரியவில்லை. ஆனால், நான் இருக்கிறேனா என்று யாரிடமாவது கேட்பாயா என்ன? நான் எங்கே என்று இருட்டில் தேடுவாயா.

கண்கள் இருட்டில் தவித்தாலும் நான் என்கிற உணர்வு. இருக்கிறேன் என்கிற நிச்சய உணர்வு அதாவது உன்னுடைய இருப்பு உனக்கு தெள்ளத் தெளிவாக தெரிகிறதல்லவா?

நீ இருக்கிறாய் என்பதை யாரேனும் சொல்ல வேண்டுமா என்ன?

அந்த நான் இருக்கிறேன் என்கிற உணர்வின் மீது உன் கவனத்தை செலுத்து.



மெல்ல அந்த நான் என்கிற உணர்வு எங்கு உற்பத்தியாகிறதோ அங்கு சென்று ஒடுங்கும்.அந்த இடம்தான் அருணாசலம். (அருணாச்சலம் என்று ஊரைச் சொல்லவில்லை உள்ளத்தை சொல்கிறார்) அதுவே ஆத்ம ஸ்தானம்" என்று மிக எளிமையான மார்க்கத்தை கூறினார்.

"பகவானே, மூர்த்தி வழிபாடு, பூஜை, மந்திரங்கள் என்று எத்தனையோ இருக்கிறதே" அவை எல்லாம் என்ன தரும்?

"இவையெல்லாமும் சித்த சுத்தி தரும்.

மனதில் ஏகாக்கிரகம் என்கிற மன ஒருமையை உண்டாக்கும். நான் யார் என்று அறிய வேண்டும் என்றால், மீண்டும் தன்னிடத்தேதான்

வரவேண்டும்." என்று பதில் பகன்றார்.

கடவுள் எங்கே என்று தேடுபவன் யார் என்று தேட வேண்டும்.

புறத்தே இந்த நான் செல்லும்போது உலகமாக விரியும். அகத்தே சென்றால் பிரம்மத்தில் சென்று ஒடுங்கும்.

இதுதான் எளிமையான கோட்பாடு.

எனவே, ஒரு ஆன்மிக சாதகன் தியானம், ஜபம் என்று தொடங்கி செய்வதெல்லாம் மனதை உள்முகப் படுத்துதலே ஆகும்.

அதாவது இந்த மனம் எங்கிருந்து உற்பத்தியாகிறது என்று சிரத்தையோடு கவனத்தை திருப்புவதே ஆகும்.

ஒரு சாதகர், ''பகவானே இந்த மனம் தானாகவே சென்று ஆத்ம ஸ்தானத்தில் சென்று உட்கார்ந்து கொள்ளக் கூடாதா?" என்று கேட்டார்.

பகவான் பதில் கூறாமல், அருகே அணில் ஒன்று நிறைய குட்டி போட்டிருந்தது. அங்கும் இங்கும் தலையை தூக்கி ஓட எத்தனித்தது. மகரிஷி அதை ஒவ்வொன்றாக எடுத்து

சிறு குடுவையில் எடுத்து பத்திரமாக வைத்து உணவும் கொடுத்தார்.

எதிரே இருந்தவர் முகம் மலர்ந்தது. பகவான் புரிகிறா? என்பதுபோல பார்த்தார்.

"இந்த அணில் குஞ்சுகளுக்கு நாம வெளியபோனா நம்மள பூனையோ, வேறு பிராணியோ கொத்தி தூக்கிண்டு போயிடும்னு தெரியாது.

அதுக்கு அந்த விவேகம் வரும் வரைக்கும் நாமதான் அதை உள்ளே வைத்து பாதுகாக்கணும்.

அதுமாதிரிதான் மனசுக்கு வெளிய போறதுனால துக்கம் வரும்கற விஷயம் தெரியாது. மனசுக்கா தெரியற வரைக்கும் நாமதான் அதை வெளியிலிருந்து உள்ள பிடிச்சு போட்டுண்டே இருக்கணும்" என்று எளிமையாக கூறினார்.

''என்னால் நான் யார் எனும் விசாரம் செய்ய முடியவில்லை. என்ன செய்வது"

''அதை ஈசனிடம் விட்டுவிடு. சரணாகதி செய்து விடு."

''அப்படிச் செய்தால் என்ன நடக்கும்?

"வைத்தியனிடம் ஒப்புக்கொடுத்த பிறகு சும்மாயிருக்க வேண்டும்.

அதற்குப் பிறகு என்ன கேள்வி. அதை ஈசன் பார்த்துக் கொள்வார்" என்று உபதேசித்தார்.

ஆனால், பல நூற்றுக்கணக்கான கேள்விகளுக்கு மௌனம்தான் உபதேசம். பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் பாதத்தில் நம்மை சரணாகதி செய்வோம்.

"ஐயே.அதி சுலபம்" என்று பகவான் கூறிய முக்திப் பதத்தை நாமும் கூறுவோம்.

ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய!

சாயிமகராஜ் குருவைதேடி
இணையத்தில் படிக்க...
www.saidhyanalaya.org

சாய் தியானா
வாட்ஸ் அப் நம்பர்
99418 16692

அன்பிற்கினிய சாய் சொந்தங்களே!



பகவான் சாயிநாதரின் பரிபூரண அருளாலும், உங்களின் அமோக ஆதரவாலும், நமது சாயி மகராஜ் குருவைதேடி ஆன்மீக மாத இதழ் கடந்த ஐந்து ஆண்டுகளாக வெற்றிகரமாக வெளிவந்து கொண்டிருக்கின்றது.

கடந்த இரண்டாண்டுகளாக உலகம் முழுவதும் ஏற்பட்டிருக்கும், பெருந்தொற்று, போர், இயற்கை சீற்றங்கள் போன்ற பல்வேறு நெருக் கடிகளால், அனைத்து பொருட்களின் விலையும் ஏறியிருப்பதை தாங்கள் அறிவீர்கள். அதைப் போன்றே பத்திரிக்கை சம்பந்தப்பட்ட, அனைத்து மூலப் பொருட்களும், கடுமையான விலை ஏறிவிட்டதன் காரணமாக, நமது இதழின் விலையையும் ஏற்ற வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகி இருக்கின்றோம்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக ரூ.10/ விலையில் வெளிவந்த நமது இதழ் வரும் மாதத்தில் இருந்து ரூ. 5/ விலை ஏற்றத்துடன் ரூ.15 / என்று வெளிவரும். பாபாவின் பக்தர்களும், வாசகர்களும் இவ்விலையேற்றத்தை பொறுத்துக் கொண்டு எப்போதும் போல் எங்களுக்கு தொடர்ந்து ஆதரவு தந்தருள வேண்டும் என்று தாழ்மையுடன் வேண்டிக் கேட்டுக் கொள்கின்றோம்.

– அன்புடன்,
ஆசிரியர்,
சாயி மகராஜ் குருவைதேடி

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

S.Jayanthy,

17/7 **A**, *பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,*
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு. சிவக்குமார். கனடா.ரூ.10000.

திரு. பாலகிருஷ்ணன். அண்ணாநகர். ரூ.3000.

திருமதி. ஸ்ரீ வல்லபானந்தமாயி அம்மா. பம்மல். ரூ.2000

திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம். ரூ.2000.

திரு. பி. ராஜகோபாலன். நங்கநல்லூர். ரூ.1000

திருமதி.உமா விஜய் ஆனந்த். அயனாவரம். ரூ.800

திரு. கேஸ்வர். ஈரோடு.ரூ.500.

திருமதி.சாந்தி. மந்தைவெளி.ரூ.500.

திருமதி.நித்யா ராஜேந்திரன். கூடுவாஞ்சேரி.ரூ.500.

திருமதி.பிரியதர்ஷினி மடிப்பாக்கம். ரூ. 500.

திரு.சின்னதுரை.குரோம்பேட்டை. ரூ.500.

திருமதி.லட்சுமி நாதன் குடும்பத்தார். மந்தைவெளி.ரூ.500.

திரு.ஆர்.வசந்தகுமார். வில்லிவாக்கம். ரூ.501

திருமதி.சுஜாத்தா பார்த்தசாரதி. சாய்ஸ்ரீ. அயனாவரம்.ரூ.500.

திருமதி.பாக்கியவதி. ராணிப்பேட்டை. ரூ.400.

திரு. பத்ரி நாராமணன். நெய்வேலி. ரூ.300.

திரு.திலகம். குரோம்பேட்டை.ரூ.260.

திரு.செகன்நாதன். முகப்பேர்.ரூ.250.

திரு.கே.ராமமூர்த்தி. ஓய்வு.அசோக் லேலண்ட். கொளத்தூர்.ரூ.200.

திரு.குமரன் ஸ்டோர்ஸ் - டிராவல்ஸ். பெரியார் நகர்.ரூ.200.

திருமதி. வரலட்சுமி பிரபாகரன். அயனாவரம். ரூ.200.

திருமதி.லதாபாபு, வேப்பம்பட்டு. ரூ.200

செல்வி.சக்திதேவி. அயனாவரம்.ரூ.200

திருமதி பிச்சையம்மாள்.பெரம்பூர். ரூ.100.

திரு ஆகாஷ் குடும்பத்தார். அயனாவரம்.ரூ.100.

திருமதி. லலிதா.துரைப்பாக்கம்.ரூ.100

சிவா அரிசி மளிகை ரூ.50.

பெரியார் நகர் பாபா பக்தர்கள் ரூ.50

திரு.அகஸ்டின் குடும்பத்தார்.
குன்றத்தூர். அரிசி -1 மூட்டை

திருமதி.சாந்தி மோகன், AYK - ரூ.100

திருமதி. அபிராமி அசோக் AYK - ரூ.100

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.



சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 220 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 550 (தபால் செலவு உள்பட)
* 5 வருட சந்தா ரூ.900 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு. 2,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

திருமதி. ஹேமாவதி நமசிவாயம். ரூ.500
திருமதி.துளசியம்மாள். அயனாவரம். ரூ. 150.
திரு.துரைச்சாமி. கோவை.ரூ.150.
திருமதி.ஜெயலட்சுமி தேவக்குமார். பெரவள்ளூர்.ரூ.200..
திரு.வேணுகோபால்.நங்கநல்லூர்.ரூ.100

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.400/ மட்டும் செலுத்தி சந்தாதாரராகுங்கள்!

ரூ.501/மதிப்புள்ள அறிய பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"

* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.



* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: 501/ மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.

குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.